323

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி க. ரக்தாக்ஷி வருஷ கார்த்திகைமீ பகுதி கக.

Vol. 1. November & December No. 11.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

காரப்பங்காடு,

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.

(233-ம் பக்கத்தொடர்ச்சி,)

ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாகையாவது:— ஸமஸ்தங்களாயும், கல்யாணங்களாயுமுள்ள குணங்களையுடைய ஸ்வரூபத்தையுடையவனாயிருக்கை; கல்யாணங்களாகையாவது:—அநுகூலங்களாயிருக்கை. இப்படியுள்ள குணங்கள் ஸ்வரூபநிரூபகங்களென்றும், நிரூபிதஸ்வரூபவிசேஷணங்களென்றும் இரண்டுவகையாயிருக்கும்.

அவற்றுள், ஸ்வரூப நிரூபகமாவது:- தனக்கு ஆசிரயமான தர்மிஜ்ஞானத்துக்கு விஷயமாம்போது தானும் தோன்றிக்கொண்டே அந்த தர்மியிடத்துள்ள இதரவ்யாவ்ருத்தியைத் தெரிவிப்பதாயிருக்கும்; அது எதுபோலவென்னில்?. குடம் ஜ்ஞானத்துக்கு விஷயமாம்போதெல்லாம் தானும் விஷயமாகி அக்குடத்திலுள்ள இதர வ்யாவ்ருத்தியை (பிறிதின் வேறுபாட்டை)த் தெரிவிப்பதாயுள்ள குவிந்தகழுத்துடைமை முதலான உறுப்பமைதிபோலேயுள்ளதாம்

இப்படிப்பட்ட ஸ்வரூபநிரூபக குணங்களால் பிறிதின் வேறென்று தெரிவிக்கப்பட்டிருந்துள்ள வஸ்துவைப்பற்றியிருக்கிற ஸாதாரண குணங்கள் நிரூபிதஸ்வரூபவிசேஷணங்களாம். அவை, குவிந்தகழுத்துடைமையான உறுப்பமைதியாலே தெரிவிக்கப்

பட்ட குடத்தைப்பற்றியிருக்கிற ரூப, பரிமாணாதி சாதாரண குணங்கள்போலே தர்மியை ஆசிரயித்திருக்கும் குணங்களாம்.

இவற்றுள், ஈசுவர ஸ்வரூபநிரூபகங்கள்.-ஜ்ஞானமும், ஆனந்தமும், அமலத்வமும், அநந்தத்வமும், உபாயத்வமும், உபேயத்வமும் முதலானவைகளாம். இப்படியே பிராட்டியும் ஸ்வரூபநிரூபகபூதையா யிருப்பள்;- க்ருபா, வாத்ஸல்ய, ஸௌசீல்ய, ஸௌலப்யாதிகள் நிரூபித ஸ்வரூப விசேஷணங்கள்.

இவற்றுள் "தவாநந்த குணஸ்யாபி ஷடேதே ப்ரதமேகுணா:" என்றும், "ப்ரக்ருஷ்டம் விஜ்ஞானம்" என்று தொடங்கி, 'குணநாம் நிஸ்ஸீம்நாம் கணன விகுணாநாம் ப்ரஸவபூ:" என்றும், "நிர்லேப மங்கள குணௌகதுகாஷ் ஷடேதா:" என்றும் சொல்லுகிறபடியே மற்ற குணங்களுக்கு காரணங்களாயுள்ள ஜ்ஞான, சக்தி, பெல, ஐசுவர்ய, வீர்ய, தேஜஸ்ஸுக்களாகிற ஆறுகுணங்கள் ப்ரதானங்களாம்.

அவற்றுள், ஜ்ஞானமாவது.-ஏககாலத்தில் எல்லா வஸ்துக்களையும் இந்திரிய நியமமில்லாமல் ஸாக்ஷாத்கரிக்கைக்கு உறுப்பாயிருக்கும் ஸ்வயம்ப்ரகாசமான தர்மபூதஜ்ஞானமாம்.

சக்தியாவது:-ஸமஸ்த காரியங்களுக்கும் தானே உபாதான காரணமாயிருக்கை. பெலமாவது:-ஜகத்சிருஷ்டி முதலியன பண்ணும்போதெல்லாம் சிரமமில்லாமை.

ஐசுவர்யமாவது.-தனக்கு நியந்தா ஒருவருமின்றித் தானே ஸ்வதந்த்ரனாய்க் கொண்டு சேதனருடைய கர்மாநுகுணமாக ஜகத்சிருஷ்ட்யாதிகளைச் செய்கை. வீர்யமாவது.- தான் உபாதான காரணமாமிடத்தில் லோகத்தில் காணப்படுகிற ம்ருத்பிண்டாதிகள்போல் விகரிக்கையன்றிக்கே கார்யங்களுக்கு விகாரங்களையுண்டுபண்ணுகை அதாவது, கஸ்தூரிவாஸனையானது தான் விகரிக்காமல் தன்னோடுஸம்பந்தித்த வஸ்துக்களுக்கு விகாரத்தையுண்டுபண்ணுவதுபோலும் என்று சொல்லுவர்கள். (அல்லது, எள்ளுத் துவயலாகும்போது அதிலுள்ள எண்ணெய் தான் விகரியாமலே எள்ளுள்ளிருந்துகொண்டு எள்ளைத் துவையலாக விகரிப்பதுபோலும் என்றும் சொல்லலாம்.)

தேஜஸ்ஸாவது.-ஸிருஷ்ட்யாதி வ்யாபாரங்களில் ஸ்வதந்த்ரங்களாயுள்ள வேறு ஸஹகாரிகளை அபேக்ஷியாதிருக்கை; இதற்கு ப்ரமாணங்கள் ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையிலும், பட்டர் அருளிச்செய்த ஸ்ரீரெங்கராஜஸ்தவத்திலும் காணலாம். விஸ்தரபயத்தாலே இவ்விடத்தில் நிரூபிக்கப்படவில்லை.

இனி, இவைகளில் ஜ்ஞானத்தினுடைய அவஸ்தா விசேஷங்களான க்ருபை முதலிய குணங்களின் ஸ்வரூபம் நிரூபிக்கப்படும். கிருபையாவது.- ஸ்ரீபாஷ்யத்திலும் சுருதப்ரகாசிகையிலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறபடி, ஸ்வார்த்தநிரபேக்ஷையான பரது:காஸஹிஷ்ணுதையாம்; அதாவது.- தனக்கொரு ப்ரயோஜநத்தை யபேக்ஷியாமல் ப்ராதிகூல்யமில்லாதவர்களுடைய துக்கத்தைப்பார்த்து ஸஹியாதிருக்கை. ஸஹியாதிருக்கையாவது.- அவர்களுடைய துக்கத்தை ப்ரதிகூலமாக நினைத்திருக்கை. நம்முடைய ஸித்தாந்தத்தில் ப்ரதிகூலத்வஜ்ஞானமே துக்கபதார்த்தமாகையால், பரது:க்கது:க்கித்வமே க்ருபையென்று ஏற்படுகிறது.

இதற்கு ப்ரமாணங்கள்.-ஸ்ரீ ராமாயணத்தின் அயோத்யா காண்டத்தில், பெருமாளுடைய குணங்களைச் சொல்லுகிற ப்ரகரணத்தில், "வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:க்கித:" என்பதனால், மனுஷ்யர்களுக்கு து:க்கங்கள் ஸம்பவித்தால் தான் மிகவும் து:க்கத்தை யடைகிறான் என்றும், கிஷ்கிந்தாகாண்டத்தில் வாலீவதாநந்தரம் ஸ்ரீஸுக்ரீவருடைய வ்யஸநத்தைப்பார்த்து, "ஸஂஜாதபாஷ்ப: பரவீரஹந்தா ராமோ முஹூர்த்தம் விமநா பபூவ" என்பதனால் சத்துருக்களின் வீரதையை அழிக்கவல்ல ராமனும் கண்களினின்றும் சோகபாஷ்பங்களை வடித்துக்கொண்டு வ்யஸநத்தால் ஒரு முஹூர்த்தகாலம் ப்ரஜ்ஞையற்றிருந்தான் என்றும், ஸுந்தரகாண்டத்தில், "ஸ்த்ரீ ப்ரணஷ்டேதி காருண்யாத்" என்கிற சுலோகத்தில் காருண்யத்தாலே தாபத்தை அடைகிறான் என்றும், சொல்லப்பட்டன. பாலகாண்டத்திலும், கிரௌஞ்ச மிதுனத்தின் புமானான பக்ஷி வேடனால்அடிபட்டதைப்பார்த்து வால்மீகிக்கு உண்டான துக்கமானது "ருஷே: தர்மாத்மந ஸ்தஸ்ய காருண்யம் ஸமபத்யத" என்று காருண்யமென்று சொல்லப்பட்டது. சுருதியிலும், ப்ரளயகாலத்தில் ஜகத்து உபஸம்ஹ்ருதமாய் ஒடுங்கிய அளவில், தான் ஏகாகியாயிருப்பதால், ரதியில்லாமலிருக்கிறான்

என்பதுபற்றி, "ஸஜகாகீநரமேதா" என்று சொல்லப்பட்டிருக்கிறது; அதாவது அப்பொழுதில் அவனுக்கிருந்த கிருபையைச் சொல்லியபடியாயிற்று மக்கண ஸம்ஹிதையில், "த்ருஷ்டேம் நஸஹதே தேவி க்லிஷ்டாந் ஸ்வாந் பரிசாரகாந்" என்பதனால், கிலேசத்தை யடைந்த தன்னுடைய பரிசாரகர்களை, பிராட்டி பார்க்க ஸஹிக்கமாட்டாள்; என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஸம்ஹிதையிலேயே "காருண்ய விலமுகி" என்பதால் கிருபையால் கண்ணீர்களுடனிருக்கிறாள் என்று சொல்லப்படுகிறது. அதுவுமன்றி "பகவத்குண தர்ப்பண"த்தில், "கரணம் காரணம் கர்த்தா விகர்த்தா" என்கிற சுலோக வ்யாக்யானவைசரத்தில், "கதம் அந்யதா பர துஃக துஃகித்வா தயோ குணைஸ்யு:" என்பதால் பரார்த்தங்களான சோகஹர்ஷங்கள் குணமாகலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நம்மாழ்வாரும், 'ஆவாவென்று அருள்செய்து அடியேனொடுமானான்' என்பதால் ஐயோவென்று கிருபைசெய்தருளினான் என அருளிச்செய்தார். திருமங்கை யாழ்வாரும், "ஆவாவென்னடியேற் கிறையிரங்காய்" என்றருளிச் செய்திருக்கிறார்.

ஆதலால் அவதாரங்களில் உண்டான யுக்தத்தில் சொல்லப்படுகிற சோகஹர்ஷங்கள் அபிநயமென்று சொல்லுவதுபோல் இதுவும் அபிநயமென்று சொல்லுவது, கீழ்க்குறித்த ப்ரமாணங்களுக்குச் சேராது. ஹேயப்ரத்யநீகனுயும், ஆநந்தமயனுயுமிருக்கிற ஸர்வேசுவரனுக்கு ஹேயமான துஃக்கம் கூடாதென்பது ஸ்வார்த்தமாயும், கர்மக்ருதமாயும் உள்ளவற்றைப் பற்றியதாம். அப்படிக்கில்லாமல் இதையும் அபிநயமாகச் சொல்லும்பக்ஷத்தில் வஞ்சனாகார்யமான அபிநயமும் லோகரீதியாய் ஹேயமாயிருப்பதால் அதுவும் கூடாது.

க்ருபை துஃக்காபிநயமாயிருக்கும்பக்ஷத்தில், இப்படியிருந்துள்ள க்ருபை ஆச்ரயணயோகியாயிருக்கும்படி யெங்ஙனே கூடும்? ஆனல், தேசிகன் "பரதுஃக்க நிராசிகீர்ஷா தயா" என்று அருளிச்செய்திருப்பது சக்தனுயிருக்குமவனுக்கு சக்யமான துஃக்கநிராகரணத்தில், கீழ் நிரூபிக்கப்பட்ட க்ருபையின் கார்யமான இச்சை, தானே யுண்டாகுமாகையாலே கார்யத்தை காரணமாக உபசரித்தருளிச்செய்தபடி. இப்படிக்கில்லாமல், பரதுஃக்கநிராசிகீர்ஷையே தயையென்று சொல்லும்பக்ஷத்தில், அந்தநிராசிகீர்ஷை அபிநிவேச

கார்யமாகையால் அதுவும் ஹேயதயா அநுபபந்நமாம். இத்தை அநுஸரித்தே ஆளவந்தார் "க்ஷணேபிதேயத் விரஹோபி துஸ்ஸஹ:" என்று அருளிச் செய்தார். பட்டரும், "தயாந்யேஷாம் து:ககா ப்ரஸஹநம் அநங்யோஸி ஸகலே:" என்று அருளிச்செய்தார்.

இனி, இப்படியிருந்துள்ள க்ருபையினுடைய நிர்ஹேதுகத்வ ஸஹேதுகத்வங்கள் நிரூபிக்கப்படுவனவாம்.

"அசிதவிசேஷிதான்" இத்யாதி சுலோகத்தின்படி ஜகத்ஸ்ருஷ்டியில் ஏககாலத்தில், ஜீவர்களுக்குக் கரணகளேபர ப்ரதானம் பண்ணுகைக்கடியான கிருபை நிர்ஹேதுகை. "நாஸௌ புருஷகாரேண" இத்யாதி சுலோகத்தின்படி, நிரங்குச ஸ்வாதந்த்ரியத்தாலே ஆழ்வார்போல்வாரிடத்தில் பண்ணும் கிருபையும் நிர்ஹேதுகை.

அப்படியன்றிக்கே ஈசுவரனிடத்தில்பண்ணும் ப்ரபத்தி, அதிகாரிவிசேஷணமா யிருப்பதாலும், அன்றிக்கே, ஈசுவரனுடைய உபாயாந்தர ஸ்தான நிவேசத்துக்கு ஹேதுவாயிருப்பதாலும், ஈசுவரனே உபாயமாகையாலும், புருஷகார பூதையான பிராட்டி, ஸ்வாதந்த்ரியாபிபூதமான க்ருபாகுணத்துக்கு உத்தம்பனம் பண்ணுகையாலும் வ்யாஜஸாபேக்ஷமாயிருக்கும். பக்தி ஸ்தலத்திலும், "ப்ராதிகூல்ய நிவ்ருத்தி மாத்ரேணா நந்தாபராதா நாத் ருத்ய ஸ்வப்ராப்திஹேதுஷு ருசிம் ஜநயதி" என்கிற ஸ்ரீபாஷ்ய ஸூக்தியின்படி, ப்ராதிகூல்ய நிவ்ருத்தி ஸூசகமான உபாஸநாரம்பத்தாலே ப்ரீதனான ஸர்வேசுவரனே "ததாமி புத்தியோகம்தம்" என்கிறபடியே உபாய நிஷ்பத்தியைப் பண்ணிக்கொடுப்பதால் அங்கும், ப்ராதிகூல்ய நிவ்ருத்திரூப வ்யாஜஸாபேக்ஷமாயிருக்கும். குமார வேதாந்தாசார்யரும், "ஸ்வரூப ஸம்ஸ்தவேள யஸ்யா: நிர்ஹேதுக ஸஹேதுகேள" என்று அருளிச்செய்தார். இதன் அர்த்தம், ஸாமாந்யமாய் எல்லோருக்கும் பலப்ரதானத்தில் உபயுக்தையான க்ருபையினுடைய ஸ்வரூபம் நிர்ஹேதுகம்; அந்த க்ருபை பலோபதாநம் செய்யுமிடத்தில் ஸஹகாரிகளான உபாயங்களை அபேக்ஷித்திருக்குமென்பதாம். ஆகிலும், சில வ்யக்திவிசேஷங்களில் ஸஹகாரிகளையும் அபேக்ஷியாமல் பலத்தைக் கொடுக்குமென்பது கீழ்க்குறிக்கப்பட்ட ப்ரமாணங்களாலே வ்யக்தம்.

மேலும் திருமந்த்ரத்தில் அகாரத்தில் அவரக்ஷணே என்கிற தாதுவினுடைய அர்த்தமான ரக்ஷணம், காலாதிகளைக் குறிப்பிடா

மையாலே ஸர்வகாலங்களிலும் ஸர்வப்ரகாரங்களாலும் ஒரு ஹேதுவையும் அபேக்ஷியாமல் நிகழ்வதென்று ஏற்படுகிறது. எல்லா விடங்களிலும் ரக்ஷணம், ஸஹேதுகமாகவே யிருக்கும்; என்னும் பக்ஷத்தில், நிர்ஹேதுகமான ரக்ஷணம் அப்ரஸித்தமாகவேண்டும். பசு, பக்ஷிகளும் தத்தம் குழங்கன்று குஞ்சுகளை நிர்ஹேதுகமாகவே ரக்ஷிக்கக் காண்கையாலே நிர்ஹேதுகரக்ஷணம் ப்ரஸித்தமா யிருக்கிறது. மேலும் ப்ருஹ்ம சப்தார்த்த நிரூபணைவஸரத்தில் "ப்ருஹதி ப்ருஹ்மயதி தஸ்மா துச்யதே பரம்ப்ருஹ்ம" என்று சொல்லுகிறவிடத்தில், ப்ருஹ்மயதி" என்கிற வித்தால் சேதநநிஷ்டமான ஜ்ஞானவிகாஸரூப மோக்ஷத்துக்குக் காரணம் என்று ஏற்படுகிறது இவ்விடத்திலும் ஹேதுவைச் சொல்லாமையால் அந்த மோக்ஷ காரணமும் நிர்ஹேதுகமென்றே ஸித்திக்கிறது. ப்ருஹ்ம சப்தத்துக்கு ஆர்த்தமாக ஏற்படுகிற ஹேயப்ரத்யநீகத்வமும் ஆச்ருத விஷயத்தில் ஹேயநிவ்ருத்தகத்வ ரூபமாகையால் அதிலும் ஹேது சுருதமில்லாமையாலே அநிஷ்ட நிவ்ருத்தகரூபமான அதுவும் நிர்ஹேதுகமாயிருக்கிறது.

அஹிர்புத்ந்யஸம்ஹிதை, லக்ஷ்மீதந்த்ரம் இவைகளில் அநுக்ரஹ சக்தியாகிய க்ருபை சேதனன்விஷயத்திலுண்டாகிற காலம் தெரியாமையால் நிர்ஹேதுகமென்று சொல்லப்படுகிறது. மேலும் திருவாய்மொழியில், "இன்றென்னைப் பொருளாக்கி" என்கிற பாட்டினுடைய வ்யாக்யானவஸரத்தில், திருக்குருகைப்பிரான் பிள்ளான், "திருப்பேர்நகரான் இன்று என்னை ஸ்வவிஷய திவ்யஜ்ஞானவானாக்கித் தன்னை என்னுள்ளே வைக்கைக்கு ஹேதுவென்? இதற்கு முன்பு இப்படிச் செய்யா தொழிகைக்கு ஹேதுவென்? என்று அவனை நான் கேட்கிறேன்; இதற்கு ஒரு உத்தரம் சொல்ல வல்லனாகில் சொல்லுவான் என்கிறார்" என்று அருளிச்செய்திருப்பதாலும், நிர்ஹேதுகமென் றேற்படுகிறது. இன்னும் இதில் வக்தவ்யங்களான விஷயங்களை விஸ்தரபயத்தால் நிறுத்திவிட்டேன்.

இனி வாத்ஸல்யகுணம் நிரூபிக்கலாகும். வாத்ஸல்யமென்பது.-வத்ஸஸ்ய இதம்-வாத்ஸம்; தத் லாதீதி-வாத்ஸலா; தஸ்யா: கர்ம-வா த் ஸ ல் ய ம். என்கிறவ்யுத்பத்தியால், அன்றீன்றகன்றினுடைய தோஷத்தை போக்யமாகக் கொள்ளுகிற பசுவின் வியாபாரம்; என்ற அர்த்தமுடையதா யிருக்கிறது. அதாவது அந்தக்

கன்றினுடை தோஷம் பசுவுக்கு போக்கியமாயிருப்பதுபோலே ஆசிரிதருடைய பூர்வாகங்களிலும், ப்ராமாதிகங்களான உத்தராகங்களிலும், அவர்ஜநீயங்களான சாரீரதோஷங்களிலும் ஈசுவரனுக்குள்ள போக்யதா புத்தியே வாத்ஸல்யம் என்று சொல்லப்படுகிறது. அன்றியும், வத்ஸம் லாதிதி-வத்ஸலா; வத்ஸலாயா: கர்ம-வாத்ஸல்யம் என்றவ்யுத்பத்தியாலும் இந்த அர்த்தம் ஸித்திக்கிறது.

இந்த வாத்ஸல்யத்தினுடைய ப்ரதமாவஸ்தை, தோஷாநாதரஹேதுவான ஸ்நேகமாகவும்; உத்கடாவஸ்தை, தோஷங்களில் குணத்வபுத்தி பண்ணுகையுமாயிருக்கும். இப்படியே சுருத ப்ரகாசிகையில் "பந்த விசேஷாந்விதேஷு ப்ரீதி- ஸ்நேஹ: தஸ்ய விபாகா:- அஸ்தாநே பயசங்கித்வம் தோஷாநவபாஸ: தோஷேஷு குணத்வபுத்தி:" என்றும், இப்படியே, ஸமந்வயாதிகரணத்தில், "தோஷேஷு குணத்வபுத்தி வாத்ஸல்யம்; யதா மாதுர் வத்ஸே" என்றும், சரணாகதிகத்ய சுருதப்ரகாசிகையில் "யதா தேநோர் வத்ஸே" என்றும் சொல்லப்படுகிறது. இதற்கு அர்த்தம்.-ஸம்பந்தமுள்ள இடங்களில் பிரீதிபண்ணுகைஸ்நேஹம்; அதினுடைய விபாகங்கள்.- அஸ்தாநேபயசங்கை, தோஷந்தோன்றுமை, தோஷங்களில் குணத்வபுத்தி என்னுமிவைகளே. எப்படி தாயான பசு தன் கன்றினிடத்தில் பிரீதியுடையதாயிருக்குமோ அப்படியே ஈசுவரன் ஆசிருதரிடத்தில் இருக்குமிருப்பு-வாத்ஸல்யமென்று சொல்லப்படும் என்பதாம். இப்படி ஜ்ஞானமில்லாத தேநுவை வாத்ஸல்யத்துக்கு த்ருஷ்டாந்தமாகச் சொல்லியபடியால் ஜ்ஞானமுள்ளவர்களுக்கும் ப்ரேமாவினால் உண்டாகிற அஜ்ஞானத்தால், தோஷங்களில் குணத்வபுத்தியுண்டாகுமென்பது பெறப்படுகிறது. இப்படியே "அவிஜ்ஞாதா ஸஹஸ்ராம்சு:" என்கிற ஸஹஸ்ரநாம பாஷ்யத்திலும், "யதோ தோஷாந் பக்தேஷ்விஹ வரத நைவா கலயஸி" என்பதிலும், வாத்ஸல்யத்தினுடைய ப்ரதமாவஸ்தையான தோஷா தர்சனத்தைச் சொல்லுகிறது.

இப்படியே ஆழ்வார்களும், "என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்றும், "குன்றனைய குற்றம் செயினும் குணங்கொள்ளும்" என்றும், "செய்தகுற்றம் நற்றமாகவே கொள்" என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீ ராமாயணத்திலும், "தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்" என்கிற சுலோகத்தில், 'யத்யபி' என்றதனுல் தோஷதர்சநமும், ஸ்யாத்' என்றதனுல் தோஷபோக்யத்வமும் சொல்லப்பட்டன.

தேசிகனும், "ஆலிஹ்ய தாம் நிரவசேஷ மலப்த த்ருப்தி:" என்கிற சுலோகத்திலும், "பரந்யாஸ சத்ம" என்கிற சுலோகத்திலும், "ஔத்ஸுக்ய பூர்வ முபஹ்ருத்ய மமாபராதாந்" என்கிற சுலோகத்திலும், தோஷபோக்யத்வமே வாத்ஸல்யமென்று அருளிச் செய்திருக்கிருர். ரங்கராமாநுஜ ஜீயரும், உபநிஷத் பாஷ்யத்தில், "அங்குஷ்ட மாத்ர: புருஷ: ததோந விஜுகுப்ஸதே" என்கிற இடத்தில், "ஆசிருததோஷாந் வாத்ஸல்யேந போக்யத்வேந ஸ்வீகரோதி" என்றருளிச்செய்திருக்கிருர். சுருதியிலும் "ஸம்யா ததே ப்ருஹ்மணே ஷ: ரமதே தஸ்மிந்நத ஜீர்ணேசயாநே" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம் -அவிவாதம் என்றும், ஸந்தி என்றும் சொல்லப்படுகிற ப்ரபத்தியை அநுஷ்டித்தவனுடைய ஜீர்ணமான சரீரத்தில் ரமிக்கிருன் என்பதாம். இந்த அர்த்தம், "திருமாலிருஞ்சோலைமலையே" என்கிற பாட்டிலும், "மங்கவொட்டுன்" என்கிற பாட்டிலும் கண்டுகொள்ளலாம்.

இப்படியே பகவத்குண தர்ப்பணத்தில், "நஹி சிரபரிசயமாநேஷ்வபி சரணுகதேஷு கல்யாபி ஹேதோ:ஸத்ய:ப்ரஸூதேஷ்விவ வத்ஸேஷு ஸஹுங்காரா: ஸபயஸ் ஸம்ப்நுதவேதநா: கிங்கர்த்தவ்ய தாகுலா: தேநவ இவ ஸம்ப்ராம்யதீ" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம்.-சிரபரிசிதர்களாயிருந்தபோதிலும் சரணுகதர்களிடத்தில், அன்றீன்றகன்றுகளிடத்தில்ஹும்காரத்தோடே கிட்டியும் முலைக்கடுப்போடே கூடியும் இன்னது செய்கிறது என்று தெரியாமல் கலங்கியிருக்கிற பசுக்கள்போலே ப்ரமிக்கிருன் என்பதாம். இதற்கு உதாஹரணமாக "அத்ய ஜாதந்து மலிநம் வத்ஸம் கௌரிவயாவதி" என்கிற சுலோகத்தைக் கண்டுகொள்வது.

அப்படியே வாத்ஸல்யத்தாலே கெஜேந்திராழ்வான் விஷயத்தில் தன்னுடைய சக்தியைமறந்து அரைகுலையத்தலைகுலைய ஸரஸ்ஸினுடைய கரையில் ஈசுவரன் எழுந்தருளினதை ப்ரதிபாதிக்கிற "தேவி ஹக் தாம்புஜேப்ய:"என்று துடங்கி பட்டர் அருளிச்செய்த சுலோகங்களிலும் காணலாம்.

ஸ்ரீ:

அந்திம ஸ்மிருதிவேண்டா.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி திருமாலிருஞ்சோலை ஜீயர்ஸ்வாமி ஸாதித்தது.

அந்திம ஸ்மிருதிவேண்டா என்ற வார்த்தை பேரருளாளப் பெருமாள் அருளிச்செய்த ஆறுவார்த்தைகளில் ஒன்றும். இதன் வரலாறு பின்வருமாறு.- ஸ்ரீபாஷ்யகாரர் யாதவப்பிரகாசனிடத்தில் வேதாந்த முதலிய பாடங்களைப் பயின்றுவருகிற காலத்தில் ஒருநாள் "ஸர்வம்கல்விதம்ப்ருஹ்ம" என்பது முதலான சுருதிகளுக்கு விசிஷ்டாத்வைத பரமாக ஸமீசீனமான அர்த்தம் அருளிச்செய்ததைக் கண்டு மதத்வேஷத்தால் கொல்ல நினைத்த அந்த யாதவப்பிரகாசனை விட்டுப் பேரருளாளப்பெருமாளுக்குத் திருமஞ்சனக் கைங்கர்யஞ் செய்துகொண்டு வந்தார். அப்பொழுது உடையவர் திருவுள்ளத்தில் சில ஸம்சயங்கள் தோன்றின. அவற்றை நீக்கிக்கொள்ள நினைத்துத் திருக்கச்சி நம்பிகளிடஞ் சென்று தண்டன் ஸமர்ப்பித்து நின்று அடியேனுக்குச் சில ஸம்சயங்கள் தோன்றின; அவற்றைப் பேரருளாளப்பெருமாளிடங்கேட்டு ஸாதிக்கவேண்டும் என்று விண்ணப்பித்தார். அதன்பிறகு திருக்கச்சி நம்பிகள் பேரருளாளப்பெருமாளிடம் ஸ்ரீபாஷ்யகாரர் கருத்தைத் தெரிவித்தார். அப்பொழுது பேரருளாளர் பரதத்வம்நாமே, பேதமே தரிசனம், உபாயமும் ப்ரபத்தியே, அந்திம ஸ்மிருதிவேண்டா, சரீராவஸானத்தாலே மோக்ஷம், பெரிய நம்பிகள் திருவடிகளில் ஆச்ரயிப்பது என்று ஆறுவார்த்தை ஸாதித்தார். இதனால் ஸ்ரீபாஷ்யகாரருக்கு இந்த ஆறு விஷயமாகவே ஸம்சயங்கள் தோன்றின. இந்த ஸம்சயங்களுக்கு உத்தரம் பேரருளாளப் பெருமான் ஸாதிக்கும்படி நேர்ந்ததென்றால் இவை ஒவ்வொன்றும் வேதாந்த முடிவுடையதென்றும், ஆழ்ந்த கருத்துடையதென்றும் அறியலாகும். இனி இங்கு அந்திம ஸ்மிருதிவேண்டா என்பதை ஆராய்வோம்.

ஸ்ரீபாஷ்யகாரர் திருவுள்ளத்தில் தோன்றின ஸம்சயங்களில் ஒன்றுக்கு உத்தரமாகப் பேரருளாளப் பெருமாள் "அந்திம ஸ்மிருதிவேண்டா" என்று அருளிச்செய்தபடியால் அந்திம ஸ்மிருதி வேண்டும் என்ற பக்ஷமும், வேண்டா என்ற பக்ஷமும் ஆகிய

இரண்டு பக்ஷமு மிருந்திருக்கவேண்டுமென்று தோற்றுகிறது. இனி இவற்றை யோஜிப்போம்.

> "யம்யம்வாபி ஸ்மரந்பாவம் த்யஜத்யந்தே களேபரம்
> தந்தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவ பாவித:"
> "தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாமநுஸ்மர"

இவை பகவத் வாக்யங்களாம். இவற்றின் பொருள் யாதொரு சேதனன் தன் அந்திமகாலத்தில் எங்தெந்த விஷயத்தை நினைத்துக்கொண்டு சரீரத்தை விடுகிறானோ அதே விஷயத்தை அடுத்த ஜன்மத்தி லடைகிறான். ஆகையால் ஸர்வகாலத்திலும் என்னையே அநுஸ்மரணம் செய்துவந்தால் அந்த அநுபவம் தன்னடைவே அந்திமகாலத்தில் வரும் என்பதாம். இதற்குத் திருஷ்டாந்தமாக ஜடபரத உபாக்யானமும் அறியத்தக்கது. ஜடபரதர்தம் ஆசிரமத்தில் கெதியற்றுக் கிடந்த ஒரு குட்டிமானை எடுத்து மிகவும் பிரியமாக வளர்த்து வந்தார். பின் அவருடைய அந்திம தெசையில் மானை நினைத்துக்கொண்டே உயிர் துறந்தார். ஆதலால் அவர் மறு ஜன்மத்தில் மானாய்ப்பிறந்தார். இதனால் பகவத் வாக்யத்திற்குப் பொருத்தமாக ஒரு ஐதிஹ்யமுங் கிடைத்தபடியால் அந்திம ஸ்மிருதி யாவருக்கும் வேண்டுமென்றே தெரிகிறது. இது நிற்க,

> "க்ருஷ்ணத்வதீய பதபங்கஜ பஞ்சராந்த மத்யைவமே
> விசது மாநஸ ராஜஹம்ச:' ப்ராண ப்ரயாண ஸமயே
> கபவாத பித்தை: கண்டாவரோதந விதௌ ஸ்மரணம் குதஸ்தே

என்று முகுந்தமாலையில் சொல்லப்பட்டது. இதன் பொருள் ஹே கிருஷ்ண! பிராணன் சரீரத்தைவிட்டுப் புறப்படுகிற தெசையில் கபவாத பித்தங்களால் நலிவுபடும்பொழுது உன் விஷயமான நினைவு ஏற்படுவது அசாத்யமாதலால் உன் திருவடித்தாமரையாகிய கூட்டுக்குள் அடியேனுடைய மனஸாகிய ராஜஹம்ஸம் இப்பொழுதே பிரவேசிக்கக் கடவது; என்பதாம்.

> "துப்புடையாரை யடைவதெல்லாம் சோர்விடத்துத் துணையாவரென்றே
> ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேனானைக்கு நீயருள் செய்தமையால்
> எய்ப்பென்னை வந்து நலியும்போது அங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன்
> அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளி
> [யானே"

என்று பெரியாழ்வாரும் பணித்தார். இதனால் ஆழ்வார்கள் ஸர்வேசுவரனை நோக்கி அந்திம ஸ்மிருதி வேண்டுமென்று நீ கீதை

333

யில் கட்டளையிட்டபடி எங்களால் அந்திம காலத்தில் உன்னை நினைக்கமுடியாது; அதற்காக இப்பொழுதே விண்ணப்பஞ் செய்து கொண்டோமென்று அருளியதனால் அந்திம ஸ்மிருதி முக்யமன்றெனவும் விளங்குகிறது. இதனால் பகவத் வாக்யத்தை முக்யமாகக் கைக்கொள்வதா? ஆழ்வாரருளிச்செயலை மேற்கொள்வதா? என்ற ஸம்சய முண்டாகலாம். இந்த ஸம்சயத்தின் தெளிவுண்டாவது அரிதாயிருக்கும். ஏனெனில்? ஸர்வஜ்ஞனையுள்ள ஸர்வேசுவரனுடைய வாக்யம் ஸாமான்யமானதென்று தள்ளிவிட முடியாது. அருளிச்செயலென்றாலோ அதுவும்,

"கண்ணமங்கையுட்கண்டுகொண்டேனென்று
காதலால்கலிகன்றியுரைசெய்த
வண்ணவொண்டமிழொன்பதோடொன்றிவை
வல்லராயுரைப்பார்மதியந்தவழ்
விண்ணில்விண்ணவராய்மகிழ்வெய்துவர்
மெய்ம்மைசொல்லிலவெண்சங்கமேந்திய
கண்ண! நின்றனக்குங்குறிப்பாகில்
கற்கலாம்கவியின்பொருள் தானே"

என்றபடி ஸர்வேசுவரனும் கைக்கொள்ளத்தக்க பெருமைவாய்ந்த அர்த்த விசேஷம் அடங்கியதாதலால் தள்ளிவிட முடியாது. ஆகையால் ஸர்வஜ்ஞராயுள்ள உடையவருக்கும் இந்த நிலைமை பற்றியே ஸம்சயந் தோன்றியது. அதில் தெளிவுண்டாகும்படி பேருளாளப்பெருமாள் பிரபந்நாதிகாரிக்கு "அந்திம ஸ்மிருதிவேண்டா" என்று அருளிச்செய்தார். இதனால் ஏனைய யோகிகளுக்கு அது அவசியமாய் வேண்டுமென்பது தானே பெறப்படுகிறது. இவ் விஷயத்தை ஆழ்வாரும்,

*எய்த்தாரெய்த்தாரெய்த்தாரென்றில்லத்தாரும்புறத்தாரும்
மொய்த்தாங்கலறிமுயங்கத்தாம்போகும்போதுஉன்மத்தர்போல்
பித்தேயேறியநுராகம்பொழியும்போதெம்பெம்மானோ
டொத்தேசென்றங்குள்ளங்கூடிற்றாகில்நல்லுறைப்போ என்றும்

* இதன்பொருள்:— அவயவங்களும் இந்திரியங்களும் முறையே தம் வியாபாரங்களையும் விஷயங்களையும் கிரஹிக்கமாட்டாமல் மூச்சு இறுதியடையும்படி இளைத்தாரென்று வீட்டிலுள்ள மனைவி மக்களும் புறம்புள்ள சம்பந்திமுதலிய உறவினர்களும் திரண்டு அலறி மேல்விழ தாம் போகும் நிலைமையில் பைத்தியங் கொண்டவர்போல நெஞ்சுகலங்கி ஆசை அதிகரிக்குங்காலத்தில் இவனைத் தனக்குச் சேஷம் என்று எண்ணும் எம்பெருமான் எண்ணத்திற்குப் பொருந்தத்தான் அவன் அடிமைஎன்ற எண்ணத்தோடு தன் நெஞ்சுசென்று கூடப்பெற்றதாகில் நல்ல உறுதியாம். என்றவாறு.

†குறுகமிகவுணர்த்தோடுநோக்கியெல்லாம்விட்ட
இறுகலிறப்பென்னும்ஞானிக்குமப்பயனில்லையேல்
சிறுகநினைவதோர்பாசமுண்டாம்பின்னும்வீடில்லை
மறுகலிலீசனைப்பற்றிவிடாவிடில்வீடஃதே

என்றும் அருளிச்செய்தார். பிரபந்நாதிகாரி தம்பரங்களெல்லாம் ஈசுவராதீனம் என்ற கொள்கையை மேற்கொண்டவனாதலால் ஸர்வேசுவரன் இவனது கடமையெல்லாம் தானே செய்துகொள்ளுகிறான். இவ்விஷயம் ஸ்ரீவராகசரம சுலோகத்தில்

"ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே சரீரேஸதி யோ நர:
தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா விச்வ ரூபஞ்ச மாமஜம்
ததஸ்த ம்ரியமாணஞ்ச காஷ்டபாஷாண ஸந்நிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்:

இதன்பொருள்:— எந்த ஒரு சேதனனும் தன்மனதும், சரீரமும் சுகமே இருக்க கபவாதபித்தங்களும் சரியான நிலைமையிலிருக்குங்கால் ஜகத்ரூபியாயும், பிறப்பிலியாயுமிருக்கும் என்னை நினைத்துவைத்தால் அவன், முன் சொல்லப்பட்டவைகளால் பாதிக்கப்பட்டு தன் பிரவ்ருத்தி நிவிர்த்திகளுக்குத் தான் சக்தனின்றிக்கே கல் புல்களைப்போல் அசித்வத்பாதந்த்ரனாய் மரணத்தையடையக்கூடிய தசையில், அவன் என்னை நினையாவிட்டாலும் முன் என்னை நினைத்ததுகொண்டு என் பக்தகோடி ப்ரவிஷ்டனானவனை நானே ஸ்மரித்து எல்லாவற்றிலும் உயர்ந்த கதியை அடைவிப்பேன் என்பதாம். இதுபகவத்வாக்யம் ஆகப்ரபந்நாதிகாரியின் காரியமெல்லாம் ஈசுவரனே செய்து தலைக்கட்டுகிறானென்பது பெறப்படும். இந்த அதிகாரிக்கு அந்திமஸ்மிருதி வேண்டா என்று இதனால் நிரூபிக்கலாயிற்று.

---

†இதன்பொருள்:— இதாவிஷயங்களில் ஆசை செல்லாதபடி ஜ்ஞானத்தால் நிரூபிக்கப்படுவதாகிய ஆத்மவிஷயத்தில் மிகவும் கருத்துடையவனாய் எல்லாவற்றிலும் ஆசையை ஒழித்த கைவல்ய நிஷ்டனாகிய ஞானிக்கும் ஈசுவரோபாஸநம் இல்லையாகில் அற்பவிஷயங்களில் ஆசையுண்டாகும். மேலும் குற்றமற்ற ஸர்வேசுவரன் பக்கல் அந்திம ஸ்மிருதி பண்ணி இச்சரீரத்தை விடப்பாராநாகில் அந்த ஆத்ம மோக்ஷம் ஆனில்லை. மோக்ஷம் எதுஎன்றால் திருநாராயணன் திருவடியடைவதேயாம் எ-று.

335

ஸ்ரீ:

விசிஷ்டாத்வைதம்

(102-ம் பக்கத்தொடர்ச்சி,)

இன்னும் இவ்விசிஷ்டாத்வைதம் என்ற பதத்தில் ஸகல வேத ஸாரார்த்தமான § அர்த்தபஞ்சகமும் அமைந்து கிடக்கின்றன. அவைவருமாறு:—விசிஷ்ட பதத்தால் பரமாத்ம ஸ்வரூபஞ் சொல்லப்பட்டதாம். இதில் உபாயஸ்வரூபமும் அடங்கியதாயிருக்கும் விசேஷணத்தால் ஆத்மஸ்வரூபமும் விரோதிஸ்ரூவமும் குறிப்பிடப்பட்டன. விசேஷணத்தால் ஆத்மா குறிப்பிடப்பட்டபடியால் இதையுடைய ஈசுவரனுக்கு இவ்வாத்மா சேஷன் (அடிமை) என்பது விளங்கும்; விளங்கவே ஈசுவரமுகமலர்த்திக் குறுப்பான கைங்கர்யஞ் செய்வதே ஆத்மாவுக்குப் புருஷார்த்தமென்று அறியலாகும். ஆக இவ்விசேஷணத்தில் புருஷார்த்த ஸ்வரூபமும் சொல்லப்பட்டதாம். விசேஷணத்தால் விரோதிஸ்வரூபம் எவ்வாறு சொல்லப்பட்டதாமெனின்? விசேஷணத்தால் அசேதனமும் உணர்த்தப்பட்டபடியால் விரோதி ஸ்வரூபமுங் கூறியதாமென்க. அசேதனம் ஆத்மாவுக்கு எப்பொழுதும் தடைசெய்யக் கூடியதாயும், ஹேயமாயுமிருக்கும். இது இவ்வாறிருக்கும் என்பதைக் கீழ்க்குறிப்பிடும் வரலாற்றாலும் அறியலாம். ஸர்வேசுவரன் ஆழ்வாரிடத்திலுள்ள மிகுந்த பிரியத்தால் அவரைப் பாஞ்ச பௌதிக சரீரத்தோடு பரம பதத்திற் கொண்டு சேர்ப்பதற்குத் திருவுள்ளம் பற்றினான். அப்பொழுது ஆழ்வார் ஸர்வேசுவரனை நோக்கிப் பிரானே! இச்சரீரம் விரோதியாயும் ஹேயமாயுமிருக்குந் தன்மையதாம்; ஆதலால் இதைத்தவிர்த்துத் தரவேண்டும் என்று பிரார்த்தித்தார். அப்பொழுது சதுரங்கமென்ற ஓர் சூதுவிளையாட்டிற் கருத்துடையவனுக்குப் பிறர்கூறும் வார்த்தை செவிக்கேறாதிருப்பதுபோல ஸர்வேசுவரன் உபேக்ஷித்திருந்தான் அந்நிலைமை கண்ட ஆழ்வார்

---

§ அர்த்தபஞ்சகமாவன:—ஆத்மா, பரமாத்மா, புருஷார்த்தம், உபாயம், விரோதி என்ற இவைகளின் இயல்புகளை விளக்குவனவாம்.

*"மங்கவொட்டுன்மாமாயை திருமாலிருஞ்சோலைமேய
நங்கள்கோனே யானேநீயாகியென்னையளித்தானே
பொங்கைம்புலனும்பொறியைந்துங்கருமேந்திரியமைம்பூதம்
இங்கிவ்வுயிரேய்பிரகிருதிமானாங்காரமனங்களே"

என்று சரீரத்தின் ஹேயதையை எடுத்துக்காட்டினார். பின் ஸர்வேசுவரன் ஆழ்வாருக்குள்ள விரோதியைக் கழித்து நிரதிசயாநந்த வீட்டை யளித்தான்.

தேசிகவரதாசார்யர்,
ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ:

உபநிஷத் விவரணம்.

(128-ம் பக்கத் தொடர்ச்சி.)

பரப்ரம்மமென்னும் இவ் வந்தராத்மாவை சிலர் ஜீவாத்மாக்களினும் மேலானவன் என்று கொண்டார்களே யாயினும், அர்த்தாந்தரமாக (வேறு வஸ்துவாக) அங்கீகரித்திலர். அதாவது,—எங்கும் பரவியிருக்கும் ஒரு பெரிய ஆகாயம் குடத்தில் உள்ளடங்கியிருக்கும் ஒரு சிறிய ஆகாயத்தினின்றும் மேலானதே யாயினும் உண்மையில் வேறு வஸ்துவாகாததுபோல, ஒரு சிறிய உபாதியை யிட்டு ஜீவாத்மா என வழங்கிவரு மவைகளினின்றும் உபாதிக்கு எட்டாமலிருப்பதால் மேலெனக் கூடுமேயல்லது உண்மையில் வேறு வஸ்துவெனக் கூடாது என்பதாம். இவர்கள்தாம் இவ்வாறாக ஒரு பெருமையையும் சிறுமையையும் கைக்கொண்டு உபநிஷத்துக்களில் ஆங்காங்கு ஓதப்படும் அந்தராத்ம பரமாத்ம பேதத்தை நிர்வஹித்து வருகிறார்கள். உபாதி அல்லது விசேஷம் எவ்வாற்றானும் சேராமையே பெருமை யென்பதும், அவை கூடுவதே சிறுமை என்பதும் இவர்கள் கொள்கை.

---

* இதன் பொருள்.—திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானே! எங்கள் தலைவனே! என்னுடைய விருப்பத்தை உன்னதாக்கிக்கொண்டு எனக்கு அருள்புரிந்தவனே! புலன்கள் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும், கர்மேந்திரியம் ஐந்தும், பஞ்சபூதங்களும், இவ்வுயிர் பற்றிக்கிடக்கின்ற பிரகிருதியும், மஹானும், அகங்காரமும், மனமும் ஆகிய உன் மாமாயையாகும் இவைகள் ஒழிய நீ உடன்படுவாயாக. எ-று.

இக் கொள்கையில், வேதாந்த வாக்யங்களில் காரணவாக்யங்களால் சொல்லப்படும் ஐச்வர்ய விசேஷங்களெல்லாம் உண்மையாகப் பெருமையில் சேராது. பரப்ரம்மமானது ஜீவாத்மா என்னும் படியைக் கடந்திருப்பதுபோல் ஸர்வேச்வரனென்னும் படியையுங் கடந்தன்றோ நிற்கிறது? மாயோபாதகத்தையிட்டிறே ஸர்வேச்வரனென வ்யவஹரிக்கப்படுவது. அதாவது,-சைதன்ய மாத்ர லக்ஷணமாம் பரப்ரம்மம் மாயோபஹிதமாமளவில் ஸர்வேச்வரனெனவும், அவித்யா தரங்கங்களாகிய அந்த:கரணங்களில் ப்ரதிபலிக்குமளவில் ஜீவாத்மாக்களெனவும் வ்யவஹாரத்திற்கு இலக்காகின்றதேயல்லது, உண்மையில் அவ் வகையான ஓர் பேதமும் இல்லை என்பதாம்.

அன்றிக்கே, ச்ருதியில் பரப்ரம்மத்திற்கு இலக்கணமாகக் கூறப்படும் ஜகஜ்ஜன்மாதி காரணத்வம் இலக்கியத்தில் உள்ளே புகாமல் நேர் நின்று இலக்கியத்தைச் சுட்டிக்காட்டி விலகி நிற்கும் ஓர் இலக்கணமாகும்; ஆதலால் பரப்ரம்மம் எல்லா விசேஷங்களையுங் கடந்து ஸர்வேச்வரன் என்னுந் தன்மையையுங் கடந்திருந்ததேயாயினும், படைப்பதும், அளிப்பதும், அழிப்பதும் இலக்கணமாகத் தடையில்லை.

இவ்வுலகோ விஜ்ஞானமாத்ரமா மவ்வாத்ம வஸ்துவின் விவர்தமாம். தாம்பில் பாம்புபோல் விஜ்ஞானமாத்ரமா மவ்வாத்ம வஸ்துவில் அவித்யா தோஷத்தால் கல்பிதமான ஆபாஸமாம். ஆபாஸங்களுக்கு அதிஷ்டானமான ஸத்தையன்றி ஸத்தையில்லையாதலால் இவ்வுலகு அர்த்தாந்தரம் (வேறுவஸ்து) ஆகாது. ஆகவே ஆத்மா ஒன்றே உளதாதலால் உபநிஷத்துக்களில் கூறப்படும் ஏகாத்மவாதம் பொருந்தும் என்று சொல்லுகின்றனர். இவர்கள் விஜ்ஞான வாதிகளே யாயினும், பௌத்தர்கள்போல் க்ஷணிக விஜ்ஞானவாதத்திற்கு இசையாமல் நித்ய விஜ்ஞானத்தைக் கைக்கொண்டமையால், உபநிஷத்துக்களில் புகுவதற்கு இவர்களுக்கும் இடமுண்டாயிற்று இவர்களுடைய இக்கருத்துக்கு உபநிஷத்துக்கள் இசைகின்றனவா என்பதை யாம் இங்கு விமர்சித்துப் பார்ப்போம்.

காரணவாக்யங்களில், பிறர்கொள்ளும் முறைப்படி இவ்வுலகு பரப்ரம்மத்தின் விவர்த்தம் எனக்கூறும் வசனம் ஒன்றேனும் இல்லை. பரிணாமமெனக் கூறும் வசனங்களே பெரும்பாலும் புலப்படுகின்றன. அவை:—

1. யதோர்ன நாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதேச யதா ப்ருதிவ்யா மோஷதய: ஸம்பவந்தி யதா ஸத:புருஷாத் கேசலோமாநி ததா க்ஷராத் ஸம்பவதீஹ விச்வம்:

2. யதா ஸுதீப்தாத்பாவகாத்விஷ்புலிங்கா: ஸஹஸ்ரச: ப்ரபவந்தே ஸரூபா: ததாக்ஷராத்விவிதா: ஸௌம்யபாவா: ப்ரஜாயந்தே தத்ரசைவாபியந்தி.

3. ஆத்மந ஆகாச:ஸம்பூத: ஆகாசாத்வாயு: வாயோரக்னி: அக்னேராப அத்ப்ய: ப்ருதிவீ.

4. ஆத்மாவா இதமேக ஏவாக்ர ஆஸீத் நான்யத் கிஞ்சனமிஷத்

5. தத் ஐக்ஷத பஹுஸ்யாம்.

என்பன முதலியனவாம்.

1. ஊர்ண நாபி என்னும் பூச்சியானது ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைச் செய்வதுபோலவும், ப்ருதிவியினின்றும் ஓஷதிகள் உண்டாவது போலவும், புருஷனிடத்தினின்று கேசலோமங்கள் உண்டாவதுபோலவும், அக்ஷரத்தினின்று இவ்வுலகு உண்டாகின்றது.

2. ஜ்வலிக்கும் அக்னியினின்று விஸ்புலிங்கங்கள் (பொறிகள்) உண்டாவனபோல, பலவகையான வஸ்துக்கள் அக்ஷரத்தினின்று உண்டாகின்றன. முடிவில் அவ் வக்ஷரத்திலேயே லயத்தை அடைகின்றன.

3. ஆத்மாவினின்று ஆகாயம், ஆகாயத்தினின்று வாயு, வாயுவினின்று அக்னி, அக்னியினின்று அப்பு, அப்பினின்று ப்ருதிவீ.

4. புலப்படுமிதெல்லாம் முன் ஓர் ஆத்மாவாக இருந்தது. வேறொன்று மில்லை.

5. அப் பரப்ரம்மமானது யான் பலவாகின்றேன் என்று ஸங்கல்பித்தது.

என்பன அவற்றின் அர்த்தமாகும்.

இவ்வசனங்களிலுள்ள உதாஹரணங்கள் பரிணமவாதத்திற்கு இசைவதுபோல, பிறர் கைக்கொள்ளும் விவர்தவாதத்திற்கு இசைவனவல்ல. அன்றிக்கே தாம்பில்பாம்பு போல் பரப்ரும்மத்தில் இவ்வுலகு கல்பிதமாகில், ஆபாஸந்தே (தோற்றுகின்றன) என்று இருக்கவேண்டும். இவ்வசனங்களிலோ ஸம்பவந்தி, ப்ரஜாயந்தே

(உண்டாகின்றன) என்னும் பதங்கள் இருக்கின்றன. இவ்வாறே காரணவாக்யங்கள் அனைத்திலும் உத்பத்தி நாசங்கள் கூறப்படுகின்றன. இவ்வுலகனைத்தும் ஆபாஸமாகில் (தாம்பில் பாம்புபோல் தோற்றுவதல்லது உண்மையில் இல்லையாகில்) உத்பத்தி நாசம் எவ்வாறு சேரும்? ஒருவன் பிறந்தான் பின்பு இறந்தான் என்று கொண்டால் நடுவில் இருந்தான் என்பது ஸித்தமாம். ஆகஉத்பத்தி நாசங்கள் உண்டாகில் அவ்வதுஸ்துவுக்கு ஒருகாலத்தில் ஸ்திதியையும் கொள்ளவேண்டும். அங்ஙனம் கொண்டால் அவ்வஸ்துவைப் பொய் என்று எவ்வாறு கூறலாம்? புலப்படும் காலத்திலும் வஸ்து இல்லையாகில் பொய் என்பது பொருந்தும். அன்றிக்கே யான் பலவாகிறேன் என்று பரப்ரம்மம் ஸங்கல்பித்தது. என்னும் வாக்யம் (தத் ஐக்ஷத பஹுஸ்யாம் என்னும் வாக்யம்) விவர்தவாதத்திற்கு எவ்வாறு சேரும்? அவித்யையால் ஒரு பரப்ரம்மம் பலவாகத் தோற்றுகின்றது எனக்கூடுமே யல்லது, யான் பலவாகின்றேன் என்னும் ஸங்கல்பம் பரப்ரம்மத்திற்குச் சேராது ஆகவே அனைத்துலகும் பொய் எனக்கொள்ளும் அவர்களுக்குக் காரணவாக்கியங்கள் சேரா வென்பது ஸித்தமாயிற்று.

இங்கு, பிறர் காரணவாக்யங்களை இணக்கிக் கொண்டுபோகும் ஒரு வழியுண்டு. அதையும் விமர்சிக்கவேண்டும். அது பின்வருமாறு:—

இவ்வுலகில் அனைத்தும் ஒவ்வொன்றின் விகாரங்களாகக் காணப்படுகின்றன. அவற்றின் ஸ்வரூபத்தை விசாரித்துப் பார்த்தால் பற்பல பேச்சுகளும் பற்பல புத்திகளும் மாறிமாறி வருகின்றதே யல்லது, வஸ்துக்கள் ஒன்றுமே புதியதாய் ஜனிப்பதாக இல்லை. இதற்கு உதாஹரணமாக ஓரிரண்டு விகாரங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

குடம், மடக்கு, பானை, சட்டி என்று வெவ்வேறுபெயர்களும் அதையிட்டு வ்யவஹாரபேதங்களும் வழங்கி வருகின்றன. பொருளோ மண்ணொழிய வேறு இல்லை. குடம், குடம் எனப் பேசுவதும் மண்ணை யொழிய வேறு பொருளையல்ல. ஒருமண், முன்பிண்டமாய் இருந்தது; பின் உருண்டு திரண்ட கழுத்தும் பெருத்த வயிறுமான ஓர் ஆகார அமைப்பில் நின்றமையால், அச்சமயம் உண்மையில் ஒரு பொருள் உண்டாயிற்றென எவ்வாறு கொள்ளலாம்? பொன்கட்டி, குடமென்றும் குண்டலமென்றும் வெவ்

வேறு பேச்சுக்கு இலக்காகின்றதே யல்லது அங்கும் பொருள் வேறு இல்லை. ஒருபாம்பு நீண்டு நிற்கும் நிலையிலும், தன் உடலைச் சுருட்டிக்கொண்டு இருக்கும் நிலையிலும் பாம்பே யல்லது வெவ் வேறு பொருளாகுமா?

அது போலவே நிரூபித்துப்பார்த்தால், விகாரங்களனைத்தும் பொருளின்றிப் பேச்சுக்கும் தோற்றத்திற்கும் மட்டில் விஷய மாவதால் பொய் எனத்தடையில்லை. இவைதான் தோற்றத்திற் கும் பேச்சுக்கும் வ்யவஹாரத்திற்கும் விஷயமாவதால், ஆகாயத் தாமரைபோல் அஸத்கோடியிற் சேரா. ஒருகால் தோன்றிற்றே யாயினும் பிறகு மறைவதால் ஸத்கோடியிலும் சேரா. அவ்விரண் டினும் விலக்ஷணமாம் (ஸதஸத் விலக்ஷணமாம்.)

ஆக விகாரங்களனைத்தும் பொய் யெனவும், அந்தந்த விகாரங் களின் முதலுருவமாகிய மண், பொன் முதலியவைகளே மெய்யெ னவும் விதிப்பதால், இதே ந்யாயத்தை விகாரங்களனைத்திலும் செலுத்தினல் மண் பொன் முதலிய எல்லாம் ஓர் ப்ருதிவியின் விகாரமாயும், அப்ருதிவியும் ஜலத்தின் விகாரமாயும், அந்தஜலமும் தேஜஸ்ஸின் விகாரமாயும், இத்தேஜஸ்ஸும் முறையே ஸன்மாத் திரமாம் பரப்ரம்மத்தின் விகாரமாய் நிற்பதால் அப்பரப்ரம்மமே மெய். தேஜஸ் முதலிய ஸகல விகாரங்களும் குடம், பானை, சட்டி மடக்கு, கடகம், குண்டலம் என்னும் விகாரங்கள்போல் வெறும் பேச்சுகளே யல்லது பொருளல்ல ஆதலால், பொய்யென்று கொள் ளத் தடையில்லை.

இக் கருத்தை உட்கொண்டே ச்ருதியில்;- வாசா ஆரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம் (விகாரம் என்பது வாக்கின் செயலாகிய பெயர்களல்லது பொருளல்ல; ம்ருத்திகை ஒன்றே மெய்.) என்று ஓதப்படுகிறது. இவ் வசனத்தின் கருத்தை யே இப்ரகரணத்தில் ஸ்ருஷ்டிக்ரமத்தை நிரூபித்துக் கொண்டு வருங்கால், "யத்அக்னே ரோஹிதம் ரூபம் தேஜஸஸ்தத்" என்று தொடங்கி, "வாசா ஆரம்பணம் விகாரோ நாமதேயம் த்ரீணி ரூபா ணீஹ்யேவ ஸத்யம்" என்று மறைவாக அக்னி, ஸூர்யன், சந்த்ரன் மின்னல் என்று ஒரு பொருளிருப்பதாக உலகத்தார் வ்யவஹரிக் கிறுர்கள்; அங்ஙனம் ஓர்பொருள் தனித்தில்லை. இதில் தோன்றும் சிவந்த நிறம் தேஜஸ்ஸின தன்மை; வெண்மை ஜலத்தின் தன்மை; கருப்புநிறம் ப்ருதிவியின் தனமை இங்ஙனம் நிரூபித்துப்பார்த்தால்

அக்னி என்னும் ஒருபொருளும் அதற்குரிய ஒரு தனித்தன்மையும் இல்லை என்பதாம். அக்னி யென்னும் விகாரம் வெறும் பேச்சுக்கிலக்கே யல்லது உண்மையிலில்லை. எல்லாவற்றிற்கும் மூல உருவமான தேஜஸ் அப்பு ப்ருதிவி என்னும் இவை மூன்று தான் ஸத்யம் என்று விஸ்தாரமாக ச்ருதி கூறுகின்றது.

இங்ஙனம் விகாரங்களின் ஸ்வரூபத்தை விசாரித்து நிர்ணயம் செய்தார், "பொய்யாகில், உற்பத்தி ஸ்திதி நாசங்கள் எவ்வாறு சேரும்?" என்று சங்கிப்பார்கள். அவர்களே விகாரங்களின் ஸ்வரூபத்தை உணர்ந்தால், மெய்யாகில் உத்பத்தி ஸ்திதி நாசங்கள் எவ்வாறு சேரும்? என்று சங்கிப்பார்கள். ஆகவே, பரிணாமமெனக் கொண்டாலும் கடைசியில் நமது விவர்தவாதத்திலேயே முடிவு பெறும்; ஆதலால் விவர்தவாதம் வேதாந்தங்களின் ஹ்ருதயத்திற்கு அனுகுணமென்னத் தடையில்லை: இவ்வளவும் அப்பிறர் கருத்தாகும்.

எம்பார்—கிருஷ்ணமாசாரியர்.

(தொடரும்)

ஸ்ரீ:

வைநதேய விருத்தாந்தம்.

இந்த வைநதேய விருத்தாந்தம், பிள்ளை லோகாசார்யர் தாம் அருளிச்செய்த ஸ்ரீ வசன பூஷணத்தில் திருஷ்டாந்தமாகக் காட்டப்பட்டதாம். இது எந்த சந்தர்ப்பத்தில் குறிப்பித்துள்ளதென்பது பிற்கூறுவதால் விளங்கும். பெரியவனாய் விளங்குபவன் பாகவதாபசாரப் படுவானாகில், அநர்த்தப்படமாட்டான்; சிறியவன் பாகவதாபசாரப்படுவானாகில் அநர்த்தப்படுவான்; என்ற நிர்ப்பந்தமில்லை. எவனாகிலும் பாகவதாபசாரப்படுவானாகில் அவன் ஈடேறமாட்டான். இவ்விஷயம்,

"அமரவோரங்கமாறும்வேதமோர்நான்குமோதித்
தமர்களிற்றலைவராயசாதியந்தணர்களேனும்
நுமர்களைப்பழிப்பராகில்நொடிப்பதோரளவிலாங்கே
அவர்கள்தாம்புலையர்போலுமரங்கமாநகருளானே"

என்று தொண்டரடிப்பொடி யாழ்வாரால் ஸாதிக்கப்பட்டுள்ளது

என்பதை மேற்கோளாகக் காட்டப்பெற்று, இது எல்லோருடைய நெஞ்சிலும் நன்றாய்ப் பதிவதற்கு ஒரு சரித்திரவழியாக விளக்க வந்தவிடத்தில் இந்த விருத்தாந்தம் அருளியதாகும்.

"இதுதான் ஸ்ரீகிருஷ்ணன் தூது எழுந்தருளினபோது நாரதாதி மஹருஷிகள் பலரும் வந்திருக்கிற வளவிலே கிருஷ்ணன் திருவுள்ளத்தைப் பின் செல்லுகைக் குறுப்பாக த்ருதராஷ்ட்ரனைக் குறித்துப் பல கதைகளும் சொல்லிவருகிற பிரகணத்திலே ஸ்ரீநாரதபகவான் அநுக்ரஹித்ததாக உத்யோக பர்வத்தில் உக்த மாகையாலே வேதாந்தோப ப்ருஹ்மண ஸித்தமிறே" என்று இந்த விருத்தாந்தத்தின் ஆசாரம் விசதவாக்சிகாமணியாகிய மணவாள மாமுனிகளால் அருளிச்செய்யப்பட்டுளது. அது வருமாறு:-

விசுவாமித்ர மஹருஷியின் சிஷ்யரான காலவரென்பவர் பலகாலம் அன்போடு விசுவாமித்ரருக்குப் பணிவிடை செய்துவந்தார். பின்பு ஒருநாள் காலவரை நோக்கிக் காலவரே! நீர் நமக்கு இதுவரையிலும் உகந்து பணிவிடை செய்தீராதலால் நாம் அதிகமாகக் களிப்படைந்தோம். இனி நுமக்கிஷ்டமான இடத்திற்குச் செல்லலாமென்று உத்திரவிட்டார். அப்பொழுது காலவர் "குருதக்ஷிணை கொடுக்காமல் சென்றால் பயனில்லையே" என்று கருதி விசுவாமித்ரரைப் பார்த்து ஸ்வாமி! அடியேனிடத்தில் ஏதாவது தக்ஷிணை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தாழ்ந்து கேட்டார். விச்வாமித்ரர் காலவரே! நீர் இதுவரையிலும் சிரத்தையோடு செய்த பணிவிடையையே தக்ஷிணையாகக் கொண்டோம்; வேறொன்றும் வேண்டா என்றார். காலவர் இந்தச் சொல்லைக் கேட்டவளவில் திருப்தியடையாமல் அடியேனிடத்தில் தக்ஷிணை பெற்றுக்கொள்ள வேண்டும்; தக்ஷிணை பெற்றுக்கொள்ளவேண்டும்; எனப் பலமுறையும் நிர்ப்பந்தித்தார். இந்த நிர்ப்பந்தத்தைக் கண்ட விசுவாமித்ரர் "ஏகதச்ச்யாமகர்ணாநாம் சதாந்யஷ்டௌது தேஹிமே, ஹயாநாம் சந்த்ரசப்ராணாம் கச்ச காலவமாசிரம்" என்று கோபங்கொண்டு உடம்பெங்கும் சந்திரமண்டலம்போல வெளுத்து ஒரு செவி பச்சையாயிருக்கும் எண்ணூறு குதிரைகள் நமக்குக் கொண்டுவந்து தரக் கடவாய் என்றார். காலவர் விசுவாமித்ரர் கேட்ட பொருள் கிடைப்பது மிகவும் துர்லபமென்பதறிந்து வியாகூலங்கொண்டு ஆகார நித்ராதிகளில்லாமல் மெலிவடைந்து பின் வருமாறு ஆலோசிக்கத் தொடங்கினர். ஆசார்யன் கோரியதைச்

செய்து தலைக்கட்டாதிருந்தால் நாம் கடன்பட்டவனாகவும், பொய்யுரைத்தவனாகவுமாவோம்; பொய்சொன்னவனுக்குப் பலம் நரகமேயாம்; அந்தோ! இனியேன் செய்வது இவ்வாறு ஜீவச்சவமாய் ஜீவிப்பதைக் காட்டிலும் உயிரைவிட்டொழிப்பது நலமன்றோ என்று பலவாறு புலம்பினார். அதன்பிறகு காலவர் "நாம் இதுவரையிலும் ஒருவரையும் யாசிக்காதிருந்து தேவர்களால் வெகுமானிக்கப்பட்டோம்; இப்பொழுது அவர்களிடத்தில் யாசிக்கும்படி நேரிட்டதற்காக ஸர்வ காரணமாயும், ஸர்வ வ்யாபகனாயுமுள்ள ஸர்வேசுவரனைத் தியானிப்போம்" என்று முயற்சி செய்தார்.

அப்பொழுது இவருடைய சிநேகிதராகிய பெரிய திருவடி நாயனார் (கருடன்) வந்துதோன்றினார். காலவர் அவரைக்கண்டவுடன் அதிக சந்தோஷங்கொண்டு நண்பரே! நீர் எனக்குச் சிநேகிதராயும், மிகுந்த பராக்ரமமுடையவராயுமிருக்கிறபடியால் என் காரியத்தைப் பூர்த்திசெய்து வைக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார். பெரிய திருவடிநாயனார் காலவர்மீது இரக்கங்கொண்டு காலவரே! உமது இஷ்டத்தைப் பூர்த்திசெய்து வைக்கிறேன்; ஒன்றுக்கும் அஞ்சவேண்டா; உமது இஷ்டம் யாதென வினவினார். காலவர் தமது குறையைத்தெரிவித்தார். பின்பு பெரியதிருவடி நாயனார் கிழக்குத்திசை முதலான நான்குதிசைகளின் விருத்தாந்தங்களை ஸவிஸ்தாரமாக எடுத்துக்கூறி உம்மை யான் எல்லாத்திசைகளுக்கும் எடுத்துச்செல்கிறேன் நாம் இருவரும் அவ்வத்திசையில் விரும்பியபொருளை ஆராய்ந்துபார்ப்போம் வாருமென்று காலவரை தம்சிறகில் ஒருபுறம் இடுக்கிக்கொண்டு முதலில் கீழ்த்திசையை நோக்கிச் செல்லலுற்றார். அப்பொழுது காலவர் பெரிய திருவடி நாயனாரைப்பார்த்து நீர் காற்றிலும் கடியவேகமாய்ச் செல்லுகிறபடியால் என் கண்ணுக்கு ஒருபொருளும் தெரியவில்லை; ஒரே சுழற்சியாகத் தோற்றுகிறது; மேலும் பசியும் அதிகரித்து விட்டது ஆதலால் சிறிது மெதுவாகச் செல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பிறகு பெரிய திருவடிநாயனார் இதோ தோற்றுகிற மேல் சமுத்திரத்திலே ருஷபகிரி என்ற பர்வதத்தில் சிறிது தங்கி இளைப்பாறிச் செல்வோமென்று அங்குச்சென்றார். அங்கு ப்ராஹ்மணியையாயும் ஜ்ஞாநிகையாயும் இருந்த சாண்டிலீ என்கிற பாகவதையைக் கண்டு வந்தனை வழிபாடுகளைச் செய்தார்கள். அவள் இவர்கள்மீது அன்புகொண்டு ஆதரித்து விருந்தளிக்க இரு

வரும் சந்தோஷத்தோடு புஜித்து சிரமபரிகாரம் செய்துகொள்வ வற்கு கண்துயிலப்போகின்ற சமயத்தில் பெரிய திருவடி நாயனார் "இந்த ஜ்ஞானாதிகையாகிய சாண்டிலீ யென்கிற பாகவதை சிறந்த திவ்ய தேசத்தில் வசிக்காமல் சாமான்யமான இவ்வூரிலிருக்கிறாளே இவளைநாம் ஒருநல்ல க்ஷேத்திரத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும்'' என்று நினைத்துக்கொண்டு கண்துயின்றார் பின் ஒரு முகூர்த்தகாலமானவாறே எழுந்திருந்து பார்த்தார்; அப்பொழுது தம் சிறகுகள் உதிர்ந்து ஒருகாரியமும் செய்தற்கு அசக்தராய் விட்டார். இந்நிலைமையைக் கண்டகாலவர் "கிந்நுதேமநஸாத்த்யாத மசுபம் பததாம்வர, நஹ்யயப் பவதஸ் ஸ்வல்போ வ்யபிசாரோ பவிஷ்யதி'' என்று ஏதேனும் உம்முடைய திருவுள்ளத்தில் தீங்குகள் நினைத்தது உண்டோ? தேவரீருக்குச் சிறிதேனும் குறைவுகள் வருவதற்கு யோக்யதையில்லையே? என்று கேட்க பெரிய திருவடி நாயனார் சாண்டிலீ யென்ற பாகவதை விஷயத்தில் தாம் நினைத்ததைக் கூறினார். அதன் பிறகு அவ்வபசாரத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக சாண்டிலீயைத் தண்டன் ஸமர்ப்பித்து நின்று அடியேன் செய்த அபசாரத்தைப் பொறுத்தருள வேண்டுமென வேண்டிக் கொண்டார். சாண்டிலீ அநுக்ரஹித்தவுடன் முன்போல பெரிய திருவடி நாயனாருக்குச் சிறகுகளும் திருமேனிச் செழிப்பும் உண்டாயின.

பின் சாண்டிலீயிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பல திக்குகளிற் சென்று பார்த்த விடத்திலும் தங்களிஷ்டம் பூர்த்தியாகாதொழிந்தது. இந்த நிலைமையில் விசுவாமித்திரர் இவர்களைச் சந்தித்து காலவரே! நாம் விரும்பிய வஸ்துக்களை நீர் கொண்டு வந்து கொடுப்பீரென்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தும் கிடைக்கவில்லை இனியாவது யாம் கட்டளையிட்டபடி குதிரைகளைப் பெறுதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்து விரைவிற் கொண்டுவந்து சேர்க்கக்கடவீரென்றார். இத்தருணத்தில் பெரிய திருவடி நாயனார் காலவரே! இனி நாம் உதாசீனமாயிருக்கலாகாது; ஆசாரியனுடைய ஆக்ஞையைச் செய்துமுடிக்கவேண்டும்; அவ்வாக்ஞையை நிறைவேற்றுவதற்குப் பொருளே இன்றியமையாத சாதனமெனநினைக்கிறேன்; பொருளில்லாமல் நாம் பலவாறாக அலைந்து திரிந்ததினால் யாதொரு ப்ரயோஜனமுமில்லை; அதைச் சேகரித்தற்கு வேண்டிய உபாயங்களைச் செய்யவேண்டும். இப்பொழுது இவ்வுலகில் தர்ம

சாஸ்திரங்களையெல்லாம் உணர்ந்தவனும், சம்பன்னனும், தயை யுடையனும் யாசகர்களின் இச்சையை நிறைவேற்றி வைப்பவனும், இருப்பவன் யயாதி என்பவனே ஆவான். அவனிடத்தில் யாம் சென்றால் நமதிச்சையை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று சொல்லி காலவருடன் யயாதியை அடைந்தார்.

யயாதி இவர்களுக்கு வந்தனை வழிபாடுகள் செய்து ஸ்வாமி அடியேனிடம் தேவரீர் வருவதற்கு நேர்ந்த காரியம் யாதென்று வினவினன். அப்பொழுது பெரிய திருவடிநாயனர் முன் விருத்தாந்தத்தைச் சொல்லி அரச! இந்தக் காலவர் உன்னால் தமது ஆசார்யன் நியமித்த கட்டளையைப் பூர்த்திசெய்துகொள்ள வந்திருக்கிறார். நீ மஹத்தான ஐசுவர்ய முடையவனும் யாசகர்களின் அபீஷ்டங்களை நிறைவேற்றிவைக்கும் தயையுடையவனும் இருக்கிறாய் ஆதலால் இவரது இச்சையைப் பூர்த்திசெய்து வைப்பாய் என்றார். யயாதி ஸ்வாமி! தேவரீர் கூறியதெல்லாம் உண்மையே. இப்பொழுது அடியேன் தேவரீர் கருதிய நிலைமையில் இல்லை. ஆயினும் தேவரீர் வரவு வீணாகலாகாது. அடியேனிடத்தில் மாதவி என்னும் பெயருடைய புதல்வி இருக்கிறாள்; அவள் சாமுத்திரிகா சாஸ்திரத்தில் கூறியபடி சகல அழகும் வாய்க்கப் பெற்றவள்; பெண்களுக்குரிய குணமெல்லாம் அமையப்பெற்றவள்; இவள் மூலமாய் சச்சந்தானத்தை உண்டுபண்ணிவைக்க வேண்டுமென்பது அடியேனுடைய கருத்து. நிற்க, பேரரசனாயிருப்பவன் இவள் பேரழகைப் பார்ப்பானாகில் பெருநிதி தந்து பெற்றுக்கொள்வான். ஆதலால் இந்தக் கன்னிகையைப் பெற்று விரும்பிய பயனையடைக என்றான். பெரியதிருவடி நாயனர் அக் கன்னிகையைப் பெற்று காலவரிடத்தில் ஒப்புவித்து காலவரே நீர் இவளைக்கொண்டு நும் இஷ்டத்தைப் பூர்த்தி செய்துகொள்வீரென்று தம் ஸ்தாநத்தையடைந்தார்.

அதன் பிறகு காலவர் இக்ஷ்வாகு குலத்தினனாய் ஸர்வஸம்பன்னனாய் விளங்கிய ஹரியச்வன் என்ற மஹாராஜாவையடைந்து அரச! இந்தப்பெண்ணைப் பெற்றுக்கொண்டு உடல் முழுதும் சந்திரன் போன்ற வெள்ளை நிறமும் காதிற் பச்சை நிறமுமுள்ள 800 குதிரைகளைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டார். அப்பொழுது ஹரியச்வன் பெண்ணின் அழகைக்கண்டு பிரியங்கொண்டு ஸ்வாமி காலவரே! என்னிடத்தில் தேவரீர் விரும்பியபடி குதிரைகள் இருநூறுதான் இருக்கின்றன. இவற்றைப் பெற்றுக்கொள்வீர். இந்தப்

பெண் மூலமாய் யான் ஒரு மகவைப் பெற்றுக்கொண்டு பின் இப் பெண்ணைத் தேவரீரிடத்தில் ஒப்புவித்து விடுகிறேனென்றான். இது கேட்ட அப்பெண் காலவரைப்பார்த்து ஸ்வாமி! இவ்வரசன் விரும்பியபடி என்னைக்கொடுத்து விடுவீர். என் வயிற்றிற் குழந்தை பிறந்தபிறகும் பெரியோரின் வரபலத்தால் எனக்குக் கன்னிகைப் பருவம் வந்துவிடும் என்னைப் பின்வேறொரு அரசனுக்குக் கொடுத்து உம்முடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்து கொள்வீரென்றாள்.

இவள் பொருத்தமாகக் கூறிய சொற்களைக்கேட்டு மகிழ்வடைந்து அரசன் விரும்பியபடி அப்பெண்ணை அவனிடம் ஒப்புவித்தார். சிலநாள் சென்றபின் ஹரியச்வன் அப்பெண்ணிடம் ஒரு அழகுள்ள ஆண்மகவைப் பெற்றெடுத்தான். பிறகு ஹரியச்வனிடம் காலவர் சென்று அவ்வரசன் கூறியபடி கொடுத்த குதிரைகள் இருநூறைப் பெற்று அவனிடம் அவைகளைப் பின் பெற்றுக்கொள்வதாய் ஒப்பித்து மாதவியை அழைத்துக்கொண்டு காசி தேசாதிபதியான திவோதாஸனிடம் வந்து தம் விருப்பத்தை அறிவித்தார். திவோதாஸன் இது விஷயம் முன்னமே யான் கேள்விப்பட்டேன் என்னிடத்திலும் இருநூறு குதிரைகள்தான் இருக்கின்றன. இவற்றைப் பெற்றுக்கொண்டு கன்னிகையைக் கொடுக்க வேண்டுமென்று ஹரியச்வன் கூறியபடி சொன்னான். காலவரும் மாதவியை அவனிடம் ஒப்புவித்தார். பின் அவனுக்கு ஓர் பிரஜை உண்டானவாறே காலவர் அவனிடம் வந்து அவனால் கொடுக்கப்பட்ட இருநூறு குதிரைகளைப்பெற்று இவைகளையாம் வேண்டும்போது தரக்கடவாயென்று அவனிடம் ஒப்புவித்து மாதவியை அழைத்துக்கொண்டு போஜநகராதிபதியான ஔசீநரன் என்னும் அரசனிடம் சென்று தம் விருப்பத்தை அறிவித்தார். அவனும்முற்குறிப்பிட்ட அரசிருவர் கூறியபடி இருநூறு குதிரைகள் தான் என்னிடமுள்ளன. பெற்றுக்கொள்வீரென்றான். அப்படியே அவனிடம் மாதவியை ஒப்பித்து குழந்தை பிறந்தபின் 200 குதிரைகள் பெற்று மேலும் 200 குதிரைகள் பெற முயன்றார். அவை எங்குமில்லை என்பதறிந்து வருத்தமடைந்தார். அப்பொழுது பெரியதிருவடி நாயனார் தோன்றி நடந்த விருத்தாந்தந் தெரிந்து இனி நீர் அஞ்சவேண்டா. 200 குதிரைகளுக்காக மாதவியைக் கொடுத்துவிடலாமென்றார். காலவர் அதற்கிசைந்து முன் ஒப்பித்துள்ள அரசரிடமுள்ள குதிரைகளையும் பெற்று விசுவாமித்திரரிடம் வந்து 600 குதிரைகளையும் மாதவியையும் அங்கீகரிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்தார். அவரும் அவ்வாறு உகப்போடு அங்கீகரித்தார். பெரியதிருவடி நாயனார் தம் இருப்பிடஞ் சென்றார். விசுவாமித்திரர் அப் பெண்ணிடம் ஒரு மகவைப் பிறப்பித்து அப்பெண்ணைக் காலவரிடம் ஒப்பித்தார். காலவர் அவளை யயாதியிடம் கொடுத்து ஆசீர்வதித்து தபசு செய்யச் சென்றார்.

நீரே எனது ஐயுறவினை நீக்கியருளல் வேண்டும்' என்று விண்ணப்பம் செய்தான். அவரும் 'அவ்வாறே ஆகுக' என்று பணித்துத் தன் திருமாளிகை சேர்ந்தனர்.

அப்பால் அவர் கூடலழகப் பெருமாள் கோவிலுக்குச் சென்று, அன்புடன் அருச்சனை புரிந்து, புஷ்ப பல தாம்பூலாதிகள் அளித்து, அறுசுவையடிசில் அமுதுகண்டருளப்பண்ணி, பின்பு ததீயாராதனமும் செய்து அவ்வாறே த்ரிராத்ரம் அங்கே தங்கி எம்பெருமானை வழிபடுவாராயினர். அப்பொழுது அழகன் அவர் கனவில் தோன்றிப் பின்வருமாறு திருவாய்மலர்ந்தருளினன்.—

முறைபடுமருமறைமுழுவதும்யாமே
மறைகளின்நெறியுணர்வாதனும்யாமே
பொறையுறுதருமபுராணமும்யாமே
அறைதருமனுவிதிஹாஸமும்யாமே.

விரிதருசாகையின்மிகுமறையானும்
அரிதுணராங்கதினங்கமதானும்
மருவிஎம்அடியிணைவழிபடலானும்
திரிமலமறுநமதுருவொளிதெரியும்.

வேதவேதாங்கங்களாலும், புராணேதிஹாஸங்களாலும் ப்ரதிபாதிக்கப்படுகிற பரதேவதை நாமேயாவோம். ஆதலால், வேதாந்த விசாரம் செய்து ப்ரஹ்ம ஜ்ஞானமடைவதனாலும், பக்தியோகத்தால் நம்மை வழிபடுவதனாலும், தேஜோமயமான நம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தை தெரிசிக்கலாகும். அவ்வாறாகவே, இப்பொழுது நமக்குப் பாதஸேவை புரியும் பக்தனொருவனுடைய ஹ்ருதயத்தில் எழுந்தருளியிருந்து, நாம் அவனை முன்னிட்டு உனக்கு உண்மைப்பொருள் நிறுவுவோமென்பதை அறிவாயாக' என்று எம்பெருமான் சொல்லிமுடித்த அளவிலே, செல்வநம்பியும் தம் சிந்தைநோய் தீர்ந்து தெளிவடைந்தவராயினர்.

அவ்வாறு கனவுகண்டதை அவர் பின்பு அரசனிடம் தெரிவித்தார். அதைக்கேட்ட மன்னவனும் மனமகிழ்ந்து, அதனைத் தன் அமைச்சர்களுக்கு அறிவித்தனன். உடனே அவர்கள் அதற்கு ஆவனபுரியுமாறு ஒருப்பட்டுப் பதினான்கு கோடி பசும்பொன்னைக் கொணர்ந்து செல்வநம்பியிடம் சேர்ப்பித்தனர்.

அவர் அதில் ஸ்ரீமந் நாராயணனை ஆவாஹனம் செய்து அர்ச்சனைபுரிந்து ஆராதித்தார். பூமகளும், நாமகளும், புருகூதன் முதலான தேவர்களும், ஏகாதச ருத்ரரும், த்வாதசாதித்யரும், அஷ்டவசுக்களும், மருத்துக்களும் அதில் சாந்நித்யமாயிருந்தனர். ஸ்ரீ

வல்லபதேவன், மிகுந்த பக்தியோடு, அப்பொன்னைக் கிழியிலே பொதிந்து ஆகாசத்தில் தூக்கி, அதனுள்ளிருந்து பரத்வ நிர்ணயம் செய்தருளுமாறு பகவானை ப்ரார்த்தித்தனன். அப்பால் அவன் தன் கருத்தின்படியே பல தேசங்களுக்கும் ஓலையனுப்பி அந்தணரனைவரையும் வரவழைத்தான். அவ்வாறு வந்தவர்களை நோக்கி, அவன் மிகுந்த விநயத்துடன், வேதாந்தார்த்த நிர்ணயம் செய்துவித்யாசுல்கத்தைப்பெற்றுக்கொள்ளுமாறுவேண்டிநின்றான்.

அஃதவ்வாறிருக்க, ஸ்ரீ சுந்தரராஜப்பெருமான் அரசன்மீது நிறைந்த அருளுடையனாதலால் அவன் மனக்குறையை மாற்றுதற்குத் திருவுள்ளம் பற்றினான். உடனே அவன் பெரிய திருவடியையும் சேனை முதலியாரையும் நினைக்க, அவர்களும் வந்து அடிதொழுது நின்றனர்.

அப்பொழுது அவர் பெரிய திருவடியை நோக்கி, 'ஓ வைனதேயனே! நாம் விரும்பிய கருமமொன்றை நீ விரைவினில் முடிக்கற்பாலை. தெளிந்த மனமும் திருந்திய செய்கையுமுடைய உன்னால் ஆகாத காரியம் ஒன்றுமே இல்லை. ஆதலால் நீ ஸ்ரீவில்லிபுத்தூரென்னும் திவ்யதேசத்தை நோக்கிப் புறப்படு. அங்கு வடபெருங்கோயிலில் பள்ளிகொண்டருளு நம்மைப் பணிந்து அனுஜ்ஞை கொண்டு, நீ மேலே செய்யவேண்டுங் காரியத்தை இப்பொழுது கேட்பாயாக. அவ்வூரில் விஷ்ணுசித்தரென்னும் விப்ரச்ரேஷ்டர் ஒருவருளர். அவர் பகவத்பக்தியும் பாகவத பக்தியும் நிறைந்தவர். நமக்குத் திருவாராதன மியற்றும் திருப்பொறையுடையவர். வேதப்பொருளை விளங்க உணர்ந்தவர். சமதமாதி ஸகலகுண ஸம்பந்நராய்ப் பட்டர்பிரானென்று பலராலும் புகழ்ந்து கூறப்படுபவர். அவர் திருத்துழாய் வனத்தைப் பரிபாலித்து, நமக்குத் திருமாலை புனைந்து சாத்துவதைத் தமக்கு உகந்த கைங்கர்யமாகக்கொண்டு வாழ்ந்துவருகிறார்.

அவ்வாறு அவர் நம் திருவடிக் கன்பராய்ச் சிறந்தவராகலின், அவரைக்கொண்டு நாம் அரசனைத் தெளிவிக்க எண்ணினோம். ஆதலால் இங்கு நிகழ்வன யாவையும் அவருக்கு நீ ஸ்வப்நத்தில் அறிவித்து, அவரைத் தம் சிஷ்யர்களுடனே அதிசீக்கிரத்தில் அழைத்து வருவாயாக. மாறனுக்கு மறைப்பொருளுணர்த்தவல்லார், இக்காலத்தில், அவரையல்லால் எவருமே இல்லை.

349

ஆதிநூலெனப்புகன்றிடும்அருமறைப்பயில்வும்
ஓதும்வேதத்தின்அந்தமும்அதனுரிப்பொருளும்
மூதுநூன்மொழிவைதிகநடைமுறைபிறவும்
கோதிலாதனகலியுகத்தொழிந்துகுன்றினவால்

சீலமில்லரும்வணங்கிடாத்தீயரும்அகந்தை
மேவிடுஞ்செயலாளரும்வேதியாயும்
சாலவேகுறுக்கிட்டபுண்டரந்தரித்தோரும்
காலமோர்கிலாக்கருமமீமாங்கியத்தவரும்

பிரமபாகையிலழுந்திடாமனத்தரும்பிறக்கும்
உருவம்யானெனுமகத்தரும்உணர்வுகுன்றினரும்
பரவும்எம்மிடைப்பராமுகரானபாதகரும்
தரணிஎங்கணும்தழைத்தனவிறந்தனதவங்கள்

உலகின்கண், பழமையான வேதம் பயிற்சிகுன்றி யிருத்தலோடு, கலியின் கொடுமையால், ஒழுக்கமும் அடியுடன் ஒழிந்து படுவதாயிற்று. பாபக்ருத்யங்கள் எங்கும்பரவி வருகின்றன. வேதநிந்தகரும், விஷ்ணுபக்தியில்லாதவர்களும், குணங்கெட்டவர்களும், குதர்க்கமே பேசுபவர்களும், ஞானசூன்யரும், நாஸ்திகவாதிகளும் அகங்காரிகளும், ஆத்ம ஜ்ஞானமில்லாதவர்களும், த்ரிபுண்ட்ரதாரிகளும், தேஹாத்மாபிமானிகளும், முதலான அசாதுக்கள் நிறைந்து துராசாரமே தலையெடுத்துவிட்டது. ஆதலால் ஓ பக்ஷிராஜனே! யாம் கூறியவாறு நீ இப்பொழுதே சென்று அவ் விஷ்ணுசித்தரை விரைவினில் கொணர்தி என்று ஆஜ்ஞாபித்தருளினன்.

அதைக் கேட்டவுடனே பெரியதிருவடி அளவில்லாத சந்தோஷத்தோடு ஆகாசத்திலெழுந்து காற்றினுங்கடுகிய வேகத்துடன் புதுவையம்பதியை நோக்கிப் படர்தலுற்றார். அநந்தரம் அவர் அந்த ஸ்தலத்தில் வடபத்ரசாயியாய் எழுந்தருளியுள்ள பெரிய பெருமாளை வணங்கி விடைகொண்டு ஸ்ரீ விஷ்ணுசித்தருடைய திருமாளிகைக்குச் சென்று, அங்கு அவருடைய ஸ்வப்நத்தில் ஸ்ரீ கூடலழகப்பெருமாள் திருவாய்மலர்ந்தருளின விஷயங்களைத் தெரிவித்தார்.

அதுகண்டு வியப்பும் களிப்பும் மேலிட்டவராகி, விஷ்ணுசித்தர் உடனே விழித்தெழுந்தனர். தாம் கண்ட கனவின் திறத்தைத் தம் தேவியிடம் உரைத்தார். வடபெருங்கோயிலுடையானை வணங்கி அவனுடைய நியமனமும் பெற்று மதுரைக்கு எழுந்தருளலானார். அவருடைய சிஷ்யர்கள் வேதகோஷத்துடன் அவரைப் பின்தொடர்ந்து வந்தனர்.

அப்போது ப்ராஹ்மணோத்தமரான செல்வநம்பி அவரை மதுரைக்கழைத்துச் செல்லுவதற்காக அங்கு எதிர்கொண்டு வந்தார். வந்தவர் அதிதூரத்திலேயே விமானத்தினின்றிழிந்து, வரன்முறையாக வந்தனை வழிபாடியற்றி, பட்டர்பிரானை மதுரையேற எழுந்தருளிப் பரதத்வ நிர்ணயம் செய்தருளுமாறு ப்ரார்த்தித்தனர். அவரும் அதற்கு 'ஓம்' என்று இசைந்து, திருச்சின்னமும் சங்கமும் பணிமாற, தேவியுந் தானுமாக தெய்வீக விமானத்திலேறி மதுரைமாநகரம் வந்து புகுந்தனர்."

மெய்ப்பொருள்கூறிப் பொற்கிழி பெறுதல்.

"அதனோடு அன்று சூரியாஸ்தமனமாயிற்று. மறுநாட் காலையில் பொழுது விடியுமுன்னே பட்டர்பிரான் பள்ளியுணர்ந்தெழுந்திருந்தார். அவர் நல்லதொரு முகூர்த்தத்தில் வல்லபதேவ பாண்டியனைக் காணவேணுமென்று, தன் சிஷ்யர்களோடு ராஜக்ருஹத்தை நோக்கிச் சென்றனர். அப்பொழுது அரசன் தன் பரிஜனங்களோடு எதிர்கொண்டு வந்து அவரைப் பணிவுடன் வரவேற்றனன்.

அதன்பின்னர் அரசன் அவர்க்கு முகமன் கூறி ஆஸனமளித்து, தான் உய்யும் வண்ணம் உண்மைப்பொருள் கண்டருளுமாறு அவரை ப்ரார்த்தித்தான். அப்பொழுது அவர் பெருமாளையும் பெரிய திருவடியையும் மனதில் நினைத்து, அரசனுக்கு மறுமொழி கூறு திருந்தனர்.

அதனால் அரசன் அவரிடம் சிறிது ஐயமுற்றான். உடனே செல்வநம்பி பட்டர்பிரானுடைய தகுதியைக் கூறிப் பாண்டியனைத் தெளிவித்து, முன்பு தாம் கண்ட கனவின்படியே கருதியனவெல்லாம் கைகூடுமென்று அவனுக்கு வற்புறுத்தினர். அதுகேட்டு மன்னவன் பெரிதும் மனங்களித்தவனானான்.

அவ்வாறிருக்கையில் அமைச்சர்கள் பல தேசங்களினின்றும் பற்பல சமய வாதியரை அங்கே அழைத்துவந்தனர். அவர்கள் காணாதம், காபிலம், யோகம், பாதஞ்சல்யம், ந்யாயம் முதலான சாஸ்த்ரங்களில் வல்லுநரும், பௌத்தரும், பாசுபதரும், ஆர்ஹதரும், சமணரும், சார்வாகருமாக எங்கும் நிறைந்து, அவரவர் தங்கள் தங்கள் சித்தாந்தத்தை நாட்டி எழுதிய ஏடுகளைப் பாண்டியன்

தூக்கிய பொற்கிழியின்மீது பொருந்துமாறு விடுத்தனர். ஆனால் அவை யாவும் கிழியினிற் றங்காது கீழே விழுந்தன. அதனால் அவ் வாதியரனைவரும் நாணத்தினால் தலைகுனிந்து நின்றனர். அவ் வேளையில் பட்டர்பிரான் பரதத்வ நிர்ணயம் செய்யத் திருவுள்ளம் பற்றி அடியில்வருமாறு அருளிச்செய்பலானார்.

'ஸ்ரீமந் நாராயணனை யல்லது பரதத்வம் வேறொன்றுமில்லை; பரப்ரஹ்ம ஸ்வரூபியாயுள்ளவனும் அவனேயாவன் என்று மனு முதலிய நூல்கள் மயக்கற உரைக்கின்றன. குறைவின்றி எங்கும் நிறைந்து விளங்குபவன் கோவிந்தனே என்பது, இதிஹாஸங்களிலும், ஸாத்விக புராணங்களிலும் இயம்பப்பெற்றுள்ளது. ஸகலமான வேதங்களும், உலகமெல்லாம் அந்த விஷ்ணுவின் வடிவமே யல்லது பிறிதில்லை என்று ஒரே மிடறாக ஒலிக்கின்றன.

யான்மறையனைத்துங்காணநின்றுளேன்யான்இவ்வையம்
தான்முழுதுடையேன்என்னைச்சார்ந்தஇச்சராசரங்கள்
நூன்மணிக்கொத்ததென்னநடங்கும்என்றுஇறைவன்தானே
மேன்மொழிந்துள்ளபாரதாதிகள்மெய்யேதேற்றும்.

அன்றியும் ஸகலவேதங்களாலும் ப்ரதிபாதிக்கப்படும் ஸர்வேச்வரன் அவனே என்பதும், நூலின்கண் மணித்தொகுதிபோல அவனைச் சார்ந்த இச் சராசரங்களனைத்தும் அவனால் வ்யாபிக்கப்பட்டுள்ளன என்பதும், அவன் தானே அருளிச்செய்த கீதை முதலான ப்ரமாண சாஸ்த்ரங்களில் வெளிப்படையாக விளங்கக் காணலாம். அது நிற்க, வேதத்தின் பூர்வகாண்டம் விஷ்ணுவை ஆராதிக்கும் முறையை விரிவாகப் பேசுகின்றது; ப்ரஹ்மகாண்டமும் அவ் வெம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளைச் சொல்லுகிறது. ஆகையால், ஸர்வ வ்யாபியாயுள்ள ஸர்வேச்வரன் ஸ்ரீமந் நாராயணனே:' என்று இவ்விஷயங்களை ஸ்ரீவிஷ்ணுசித்தர் நன்கு தெளிவித்து, அதனை ஓர் ஏட்டில் எழுதிக் கிழியினிடம் செல்லுமாறு விடுத்தனர்.

பாசுரமிதனைத்தாலபத்திரத்தெழுதிப்புத்தூர்ப்
பூசுரன்எடுத்தான்அன்னஆவணம்புறநூலோரை
மாசறத்துணிப்பான்சென்றவாளெனப்பிறங்கியோடித்
தேசுறநிறுவும்விஞ்சைக்கிழித்தலைச்சிறந்ததன்றே.

உடனே அது அந்தப் பொற்கிழியோடு பொருந்திச் சிறப்புற்று நின்றது. அதில் அமர்ந்திருந்த தேவதைகள் அவ் வாவணத்தை அங்கீகரித்தனர். வித்யாசுல்கமாக வைத்திருந்த பொன்

னும் ஸரஸ்வதீ தேவியால் விஷ்ணுசித்தர் கையினில் அளிக்கப்பெற்றது. அப்பொழுது எல்லோரும் எல்லையில்லாத இன்ப வெள்ளத்தில் மூழ்கினர். இந்திரன் முதலிய இமையவர் குழாங்கள் தத்வத்தின் உண்மை தெளிந்து ஆனந்தபரவசராய் அலர்மழை தூவினார்கள். தேவதுந்துபி முதலான மங்கள வாத்யங்கள் எங்கும் முழங்கின.

அந்நிகழ்ச்சிகளை எல்லாம் அரசனும் தன் கண்மணிகுளிர்ப்பக் கண்டு மகிழ்ந்தான். அதனால் அவன் அவருக்குப் பலவகைச் சிறப்பும் பரிவுடன் இயற்றினன். ஒருசீரிய சிங்காதனத்தின்மீது விஷ்ணு சித்தரை வீற்றிருந்தருளுமாறு வேண்டிக்கொண்டான். தன் மந்திரிகளுடனே மரபு வழுவாமல் அவர்க்குப் பூஜைபுரிந்தான். மிகவும் விலையுயர்ந்த செம்பட்டாடைகளை அவருடைய திருமேனியில் சாத்தினன். சூர்ய சந்த்ரர்போல ப்ரகாசிக்குமாறு சுவர்ணகசிதமான ஆபரணங்களால் அவரை அலங்கரித்தான். அப்பொழுது பட்டர்பிரானுக்குப் பாவையரனேகர் பணிவிடை புரிந்தனர். வெண்கொற்றக் குடைமேலே நிழற்ற அவர்கள் அவர்க்கு வெண்சாமரைகளும் விசிறியும் வீசினர்.

பல்லியம்பெரிதுமார்ப்பப்பரிசனர்பாவிமொய்ப்ப
வெல்லுறுதடக்கைஎந்தல்வேழத்தின்பிடரிலேற்றி
மல்லுறுதிணிதோள்வென்றிமன்னவன்நடந்துபின்னே
செல்லுவதாகிக்கூடல்நகர்வலஞ்செய்வித்தானே.

அவ்வாறே பாண்டியன் பட்டர் பிரானை ஓர் யானையின் மீது எழுந்தருளப்பண்ணி, மிகுந்த விமரிசையோடு அவரை நகர்வலஞ் செய்வித்துத் தான் பின்னே நடந்து செல்வானாயினன். அங்ஙனம் அவர் பவனிவருங்காலையில், ஸ்ரீ சுந்தர ராஜன் கருடாரூடனாக ஸேவை ஸாதித்தருளினன். அப்பொழுது சேனைத்தலைவர் முதலான திவ்யபரிவாரங்களும், நித்யஸூரிகளும், மற்றுமுள்ள தேவர்களும் திரண்டு ஸ்தோத்ரம் செய்தார்கள். அவனுடைய திருமேனியில் ஹாரகேயூரங்களும், பாஹுவலயங்களும் அழகுபெற்று விளங்கின. கோடிஸூர்ய ப்ரகாசமுள்ள கிரீடமொன்று அவனுக்கு சிரோபூஷணமாகத் திகழ்ந்தது. திவ்யமான பீதாம்பரம் அவனுடைய திருவரையில் அணியப்பெற்றிருந்தது. ஸ்ரீ கௌஸ்துபமும் வனமாலைகளும் அவன் திருமார்பினை அலங்கரித்தன.

உலகுக்கெல்லாம் ஒருதனிமுதல்வனான எம்பெருமான், எழுதுதற்கரியவடிவழகோடு தன் கமலம் போலுங் கண்ணிணைகளால்

குளிரநோக்கி அருள் செய்தவுடனே, ஸ்ரீவிஷ்ணுசித்தர் அவற்குத் திக்கு நோக்கி தெண்டன் ஸமர்ப்பித்துப் பல்லாண்டுகூறிவாழ்த்து வாராயினர்.—

திருமால்கருணைப்பேரழகாந்தெய்வத்திருப்பாற்கடன்மூழ்கி
வருமாதரத்தாற்பேரன்புவளரத்தளராமொழிவிம்மக்
கருமாணிக்கச்செழுந்திரளேகண்ணேமணியேகற்பகமே
பெருமாவென்றுபுதுவைநகர்ப்பெம்மான்வாழிவாழ்த்துகின்றான்

மல்லாண்டிலங்குமணத்தின்டோள்மாயாதூயபரமேட்டி
தொல்லாண்டிருந்தகுடியடியோமுன்னேடியாமுந்தொழுதொழும்
எல்லாந்தருமுன் திருவடிகளிரண்டும்பண்டைஎமதுணர்வும் (பும்
பல்லாண்டூழிபல்லாண்டுபலகால்நூறாயிரத்தாண்டே.

உருளுஞ்சகடமுடைந்தோடஉதைத்தமலர்த்தாள்பல்லாண்டுன்
மருமாமார்பத்துறைகின்றமங்கைதானும்பல்லாண்டு
பருதிகோடியெனப்பிறங்கும்படைச்சக்கரமும்பல்லாண்டு
தருணமதியமயுதநிகர்சங்கத்திறையும்பல்லாண்டே.

பூணும்பணியான்சிலைமுறித்தபுனிதக்கேண்மைபல்லாண்டு
தாணின்றுதைப்பத்தலைகுனிக்குஞ்சார்ங்கவில்லும்பல்லாண்டு
காணுங்கனகன்மார்பிடந்தகடும்போர்த்திறமும்பல்லாண்டு
வாணன்புயமாயிரமறுத்தமறச்சேவகமும்பல்லாண்டே.

இங்ஙனம், எம்பெருமானுடைய திவ்ய சௌந்தர்யத்துக்கு ஓர் அவத்யம் வாராவண்ணம், ஸ்ரீவிஷ்ணுசித்தர் அவனுக்குத் திருப்பல்லாண்டுபாடி மங்களாசாசனம் செய்தருளினவுடனே, தேவதேவனை திருமால் பெரியதோர் உவகையுற்று, அவரைநோக்கி, 'உமக்கு வேண்டுவதொன்றனை வினவுதிராயின் யாம் அதனை அவ்வாறே அளிக்கக்கடவோம்' என்று திருவாய் மலர்ந்தருளினன்.

அதைக்கேட்டவுடனே அவர் தம் உள்ளக்கமலம் வாய் மலர்ந்து, காதல்பெருகக் கரைந்துருகினவராகி, 'நித்ய சூரிகளுக்கு நிர்வாஹனான ஓ எம்பெருமானே! அடியேன் இப்பொழுது போலவே எப்பொழுதும் தேவரீரை ஸேவித்துக் கொண்டிருக்குமாறு திருவுள்ளம்பற்றி யருளல்வேண்டும்' என்று ப்ரார்த்தித்தார். அப்பொழுது பகவான் அவரை நோக்கி, 'ஸ்ரீ வல்லபதேவ மஹாராஜனுடைய ஸபா மத்தியில், மிகவும் அழகிய வேலைப்பாடுள்ளதும், மனதைக்கவரத்தக்க மாட்சியுடன் விளங்குவதுமான ஒருமண்டபம் உளது. அதுவே மல்லமண்டபம் என்று வழங்கப்படுவதாகும். அதன்கண் யாம், உம்முடைய சேர்த்தியினின்று அரைக்கணமும் அகலாமல் உகப்புடன் வீற்றிருந்தருளுவோம்' என்று மறுமொழியளித்தனன்.

அவ்வாறருளிச்செய்து எம்பெருமான் அந்தர்த்தானமானவுடனே, பட்டர்பிரானைப் பாண்டியன் தன் அரமனைக் கழைத்துச்சென்றான். அங்கு அவர்க்கு ஸமஸ்தமான உபசாரங்களும் செய்து, அவருடைய திருவடிகளைத் தன் சென்னியில் சூடி, அரசன் தான் முன்பு அவரிடம் சந்தேகங்கொண்டு அவர் பெருமையறியாதியற்றிய பிழையினைப் பொறுத்தருள வேண்டினன். அதன் பின்னர் அவன், அளவில்லாத நிதிக்குவைகளை யளித்து, அவற்றையெல்லாம் ஒட்டகங்களின் மீதேற்றி அவருடைய ஊருக் கனுப்பினான்.

அநந்தரம் ஸ்ரீ விஷ்ணுசித்தரும் மிகுந்த வைபவங்களோடு மதுரையினின்று புறப்பட்டு, ஸ்ரீவில்லிபுத்தூரைச்சென்றடைந்தார். அவ்விடத்தில் அவர் தென்னவனளித்த த்ரவ்யங்களை யெல்லாம் கோயிற்றிருப்பணியிற் செலவிட்டு, எம்பெருமானுகந்த கைங்கர்யங்களில் எப்பொழுதும்போல் ஈடுபாடுடையராய் எழுந்தருளியிருந்தார்.

இவ் வரலாறுகள், நிகழ்வதற்கு முன்னரே, எனக்கு நாரதமஹரிஷியால் நவிலப்பெற்றுள்ளன. இவை கேட்பவர்களுக்கு இம்மை மறுமைப் பயன்களை எய்துவிக்கவல்லன. ஓ தபோதனர்களே! நீங்களும் இவற்றைக் கேட்டு க்ருதார்த்தரானீர்கள். அஷ்டாங்க விமானமும், வையைநதியும், சித்ர ரதவனமும், யானைமலையும், ரிஷபாசலமும், முதலானவற்றின் மாஹாத்மியங்களை நான்முகன் நாரதருக் கருளிச்செய்ய, அவர் எனக்குக் கூறியவாறே நான் உங்களுக்குச் சொல்லிமுடித்தேன். மிகவும் உத்தமமான இந்த க்ஷேத்ர மான்மியத்தை வைகாசிமாதம் சுக்லபக்ஷ த்வாதசியிலேனும் மற்றை நாட்களிலேனும் கேட்பவர்கள் ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனுறையும் ஸ்ரீவைகுண்டத்தையே அடையக்கடவர்:" என்று இவ் வகையாக மதுரையின் மான்மியத்தை ஸ்ரீ சௌனகாதி முனிவர்களுக்கு வேதவ்யாசர் விஸ்தாரமாக அருளிச்செய்தார்.

பதின்மர்பாடலுக்குமுற்பதிகமாகவே
புதுவையாசிரியனார்புகல்பல்லாண்டுதான்
மதுரைமாநகர்தனிற்பிறந்தவாறமையால்
இதனைநேர்தலநிலத்தியம்பவல்லமோ?

வாழிதென்கூடல்மாநகரம்வாழியிவ்
ஆழிசூழ்புவியெலாம்வாழியாரணம்
வாழிமாலழகனும்மதுரவல்லியும்
ஊழிதோறூழிபல்லாண்டுமோங்கவே.

கூடல் மான்மியம் முற்றும்.